## கலாவல்லி இலக்கியப் பரிதியின்

## இதர நூல்கள்

### வெளிவரவுள்ளவை

* கவிக் களஞ்சியம் - நூற்றுக்கும் மேற்பட்ட ஈழத்து எழுத்தாளர்களின் கவிதைகள் தொகுப்பு
* தாரகை என்ற மணித்திரள் (கவிதைத் தொகுதி) - கலா - குமரிநாதன்
* மனம் என்னும் மாய ஏணி (உளவியற் கைநூல்) - ஞானம்பிகை குகதாசன்
* புது வெள்ளம் (காவலூர் எஸ். ஜெகநாதனின் அனைத்துப் படைப்புகள் மீது முழு ஆய்வு) - கலா - குமரிநாதன்
* வானத்து நிலவு (சிறுவர் சிறுகதைத் தொகுதி - காவலூர் எஸ். ஜெகநாதன்
* ஊரில் ஊர்வலம் (சிறுகதைத் தொகுதி) - கலா - குமரிநாதன்
* தொடுவானம் (குறுநாவல்) - பொ. பத்மநாதன்
* வெற்றுச் சிப்பிகள் (குறு நாவல்) - காவலூர் எஸ். ஜெகநாதன்
* தோட்டித்துப் பூக்கள் (நாவல்) - கலா - குமரிநாதன்

### வெளிவந்தது

* உடைவுகள் (குறு நாவல்) - காவலூர் எஸ். ஜெகநாதன்

காவலூர்
எஸ். ஜெகநாதனின்

# அறுவடை



தொகுப்பு :
கலா-குமாரநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை

காவலூர் எஸ். ஜெகநாதனின்
ஆக்க இலக்கியத்துக்குப் புறம்பான
எழுத்துப்பணி

தொகுப்பு:
**கலா - குமரிநாதன்**



வெளியீடு:
**கலாவல்லி இலக்கியப் பரிதி**
161, செட்டியார் தெரு,
கொழும்பு-11
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*First Editon*
**1000** Copies

**' ARUVADAI"**
**THE SELECTED WORKS**
**OF**
**KAVALOOR S. JEGANATHAN**

*Compiled by*
**KALA - KUMARINATHAN**
42, New Chetty Street,
Colombo-13.
Sri Lanka

*Cover Design by*
**KAVIYAR ALAVEDDI PO. GNANADESIKAN**

*Published by*
**KALAVALLI ILAKIYA PARUTHY**

*Printed by*
**THE MEIHANDAN PRESS LIMITED**
161, Sea Street, Colombo-11
Sri Lanka

**Price :**
[redacted] **3:60**

நூன் முகம்

# சிறு போக அறுவடை

**1976**-ம் ஆண்டின் முற்பகுதியில் நான் பத்திரிகைத் துறையில் காலடிவைத்து, கலாவல்லி வெளியிட்ட காலத்திலே தான் காவலூர் எஸ். ஜெகநாதன் இலக்கியத் துறையில் பிரவேசித்தார்.

இவரது ஆரம்ப காலச் சிறு சதைகளில் ஒன்றான ''புரியாத பெண்மை'' கலாவல்லியில் பிரசுரமாகியது.

தற்போதய சிறுகதைகள் போன்று சிந்தனைச் செறிவும் சமூகப் பார்வையும் புரியாத பெண்மையில் காணப்படாத போதிலும், கதை சொல்லும் விதம், நடை நுணுக்கம் என்பன கைவரப்பெற்று, 'ஜெகநாதன் வளரக் கூடியவர்' என்று பறை சாற்றின.

எனது ஊகம், கணிப்பு என்பன தவறவில்லை! ஆறு மாதம் என்ற குறுகிய கால எல்லைக்குள் முற்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் தரத்தில் உயர்வாக பல்வேறு பத்திரிகைகளிலும் பதித்ந்தோடு, தனது சுய முயற்சியால் ''சொந்தங்கள் தொடர்கின்றன என்ற சிறுகதைத் தொகுதியையும் நூலுருவில் வெளிக் கொணர்ந்து விட்டார்.

இன்று......! ஜெகநாதன் இலக்கியத்துறையில் சிறு கதையோடு மட்டும் நின்றுவிடாது கவிதை, உருவகம், நாவல் போன்ற பல்வேறு இலக்கிய கூறுகளிலும் தமது திறமையைக் காட்டி உயர்ந்து நிற்கிறார். என்பதை ஏலவே வெளிவந்த நூல்களும், அந்தந்த நூல்களுக்கு முன்னுரை வழங்கிய அறிஞர்களின் கூற்றுகளும் நிறுவியுள்ளன.

மிகவும் குறைந்த பிரசுரகளமே யுள்ள நம்நாட்டு பத்திரிகை, சஞ்சிகைகளிலும் எழுதி அனைவரினதும் கவனத்தை ஈர்த்த ஜெகநாதன், பல இலக்கியப் போட்டிகளில் பரிசில்களும் தங்கப் பதக்கங்களும் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனீயை விட மிக்ச் சுறுசுறுப்பாக இயங்கிய இவரின் எழுத்துப் பணி மேற்குறிப்பிட்டவையை விடப் புறம்பாகவும் இருந்தன. அவற்றை முழுதாக தொகுத்து வெளியிடுதல் பெரும் போக அறுவடையாக அமையும்.

ஆனல்...........!

பிரசுர வசதியீனங்கள்! மாதிரிக்கு ஒன்ருகவேனும் தொகுத்து சிறுபோக அறுவடையாக மட்டுமன்றி, ஒரு வரலாற்றுப் பதிவேடாக வழங்குவது எனது கடமை, தவிரவும், இவரது எழுத்துப் பணியின் முழுப்பரிமாணங்களையும் கண்ணுற்றவன் என்ற வகையின் விளைவே இந்த அறுவடை நூல்!

நூல் வெளியீட்டில் இது வித்தியாசமான முயற்சி!

எட்டு ஆண்டுகள் என்பது இருபத்தெட்டு வயது நிரம்பிய ஜெகநாதன் என்ற இளைஞனுக்கு குறுகிய காலமே.

அதேவேளை..... ......!

எண்ணிக்கையில், தரத்தில் உயர்வாக இலக்கியத்தில் இவர் பணி உயர்ந்திருப்பினும், அது சிறுபோக அறுவடைதான்!

ஏனெனில்............!

ஜெகநாதன் முன் காலம் நீண்டு கிடக்கிறது; போலவே, சாதனையும் நீண்டு செல்லும்; சந்தேகமில்லை!

ஏறத்தாள எட்டு ஆண்டுகளில் ஆக்க இலக்கியத்துக்கு புறம்பான எழுத்துப் பணியினை மதிப்பிட்டு ஒரு சோறுகளை பதம் பார்த்திடவும், இவரது அயராத இலக்கிய பணியை பாராட்டு முகமாக ஒரு பரிசாகவும் இத்தொகுப்பினை வழங்குவதில் பூரிப்படைகிறேன்.

தேர்ந்தெடுத்துப் பிரசுரிக்க ஆக்கங்களைத் தந்துதவிய ஜெகநாதனுக்கும், அட்டைப் படம் வரைந்துதவிய கவியர் அளவெட்டி பொ. ஞானதேசிகன் அவர்களுக்கும் எனது இதைய பூர்வ நன்றி உரித்தாகட்டும்!

10-7-83
கொழும்பு-11

**கலா - குமரிநாதன்**
ஆசிரியர் ''கலாவல்லி''

## அறிமுகம்

# அறுவடையின் விளைமணிகள்

**சோசலிசம்** :- கலாவல்லி இதழில் காவலூரான் என்ற புனை பெயரில் ஒவ்வொரு பக்கக் கட்டுரை மாதாமாதம் எழுதிவந்தார். பல்வேறு பிரச்சனைகளிலும் பார்வை பதிப்பதாக அது அமைந்தது, அதில் ஒன்று சோசலிசம்.

பக்கம் 7

**நால்வர் நவின்றவை** :- இந்தத் தலைப்பின் கீழ் நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள எழுத்தாளர்களோடு தொடர்பு கொண்டு, வெவ்வேறு கேள்விகளுக்கு நால்வரின் பதில்களைப் பெற்று ஓர் அம்சத்தினை சுடர் சஞ்சிகைகளில் நடத்தினர். இஸ்லாமிய இலக்கியம் சம்பந்தமான கேள்வியும் பதிலும் இந்நூலை அலங்கரிக்கிறது. இத்தகைய முயற்சிகளின் பரந்த நோக்கு உய்த்துணரக் கூடியது.

பக்கம் 8

**தோட்டங்கள் தோறும்** :- பேராதனையில் ஜெகநாதன் பணியாற்றிய காலம் மலையக மக்களின் துயர வாழ்வைக் கண்டு துடித்தவர்- மலையக மக்களின் வாழக்கைப் பிரச்சனைகளைச் சிறு கதைகளாக வடித்தவர், தோட்டங்கள் தோறும் என்ற தலைப்பில், அங்கு தான் கண்ட துயரச் சித்திரங்களை தினகரன் குறிஞ்சிக் குரலில் எழுதினர். அவற்றில் ஒன்று இந்நூலில் துயர் சாற்றுகிறது.

பக்கம் 12

**பிறந்த மண்** :- ஜெகநாதனின் இலக்கியப் பணியினைக் கௌரவித்து இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் பாராட்டுவிழா நடத்தினர்கள். அதனையொட்டி ஈழநாடு இதழில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டார்கள், அதில் இடம் பெற்ற ஒரு கட்டுரைப் பகுதி இங்கு இடம் பெறுகிறது.

பக்கம் 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளைஞர் நெஞ்சில் :-** "இளைஞர் நெஞ்சில் கனலும் நெருப்பு" என்ற தலைப்பில் பதினைந்து கட்டுரைகள் வரை தினகரனின் "இளைஞர் வட்டப்" பகுதியில் எழுதினார். சாதி, சீதனம், சினிமா மோகம், பாலியல் நோய்கள், வேலையில்லாத் திண்டாட்டம் என்றெல்லாம் பல்வேறு உப தலைப்புகளில் கதையும் கட்டுரையும் கலந்த பாணியில் மனதைத் தொடுமாறு எழுதினார். அத் தொடரின் ஒரு கட்டுரை உங்கள் பார்வைக்கு!

பக்கம் 15

**உளவியல் மஞ்சரி :-** சிறு சஞ்சிகைளின் வளர்ச்சியில் அக்கறை மிகுந்த ஜெகநாதன், இலங்கையில் பல்வேறு பாகங்களிலுமிருந்து அவ்வப்போது வெளிவந்த சிறு சஞ்சிகைகளைப் பிரபலமான பத்திரிகைகளில் மிகப் பொருத்தமான முறையிலும், சம்பந்தப் பட்டவர்களை உற்சாகப் படுத்துவதாகவும் இலக்கிய ஆர்வலர்களின் கவனிப்பை ஈர்க்குமாறும் எழுதினார். 'கலைமலர்' 'தாரகை' 'கிருதயுகம்' 'மாருதம்' 'ஞான தீபம்' 'செவ்வந்தி' முதலான பல சிற்றேடுகளை அறிமுகம் செய்து எழுதினார். பெரும்பாலானவை 'நந்தனு' என்ற புனைப்பெயரில் தினகரனில் வெளிவந்தன. அவற்றில் ஒன்றுதான் 'நான்' உளவியல் மஞ்சரியின் அறிமுகம்.

பக்கம் 17

**இலக்கியத்துறையில் :-** இலக்கியத்துறையில் இளைய தலைமுறை என்ற தலைப்பில் ஈழநாடு வாரமலரில் புதிய தலைமுறை எழுத்தாளர்களை ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி இருபத்தேழு கட்டுரைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் இளம் எழுத்தாளர்களைப் போய் சந்தித்து அவர்களைப்பற்றி, அவர்களது ஆக்க இலக்கிய முயற்சிகள் பற்றி, இலக்கியக் கருத்துக்கள் பற்றி சுவைவாக எழுதினார். அத் தொடரில் துரை மனோகரன் பற்றிய கட்டுரை இங்கு இடம் பெறுகிறது.

பக்கம் 19



**பரதன் பெற்ற பாதுகை :-** நாடகத்துறையில் ஜெகநாதன் ஈடு படாதபோதும், சில நாடகங்களுக்கு அவர் எழுதிய விமர்சனங்கள் பயன் மிக்கவையாக அமைந்துள்ளன. 'பரதன் பெற்ற பாதுகை' நாடக விமர்சனம் அவற்றுள் ஒன்று.

பக்கம் 24

**அக்கரைப் பூக்கள் :-** தமிழகத்தின் காத்திரமான இலக்கிய கர்த்தாக்கள் பலருடன் நெருங்கிய உறவு கொண்டவர் காவலூர் ஜெகநாதன். தமிழக ஆக்க இலக்கிய கர்த்தாக்களை அறிமுகம்செய்து அவர் சில கட்டுரைகளை தினகரன் வார மஞ்சரியில் எழுதியுள்ளார். சுடர் இதழில் அவர் எழுதிய 'அக்கரைப் பூக்கள்' கட்டுரை தமிழ் நாட்டின் முக்கிய படைப்பாளிகள் பற்றி விவரிக்கிறது.

பக்கம் 25

**பஸ் உணர்ச்சிகள் :-** சமூகக் கொடுமைகளைக் கண்டு சீறி எழுந்து எழுதிய ஜெகநாதன், அருவருத்து முகம் சுழிக்கும் பல நடைமுறைகளைக் கண்டு 'பஸ் உணர்ச்சிகள்' போன்ற கட்டுரை சிலதும் எழுதியிருக்கிறார்.

பக்கம் 30

**இலக்கிய உலகம் :-** இலக்கிய வாதிகளுக்கும் இலக்கிய செய்திகளுக்கும் வெகுசன தொடர்பு சாதனங்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று விரும்பி, தினகரன் இலக்கிய உலகம் பகுதிக்கு சில காலம் இலக்கிய செய்திகள் சேகரித்து எழுதியவர், மாதிரிக்காக சில..........!

பக்கம் 32

**விதம் விதமான :-** பல்வேறு பிரதேசத்திலும் வாழும் சூழல், வாழ்நிலை, பழக்கவழக்கம், இவற்றால் பாதிக்கப்பட்டு, உளவியல் ரீதியாக நுட்பமான பேதங்களைக் கண்டு, பல்வேறு சூழலின் சாதாரண மனிதர்களை சந்தித்து ஒரே கேள்வியைப் பலரிடம் கேட்டு அவர்களின் பதலினூடாக தரிசிக்கும் நிலைகளைச் சில கட்டுரைகளில் மித்திரன் வார மலரில் எழுதினார். அவற்றுள் இங்கு குழந்தைகளைச் சந்தித்தது உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதியவார்ப்பு :-** தினகரனில் 'புதியவார்ப்பு' என்ற தலைப்பில்
பக்கம் 39
ஜெகநாதனைப் பற்றி அந்தனி ஜீவா எழுதிய குறிப்பு இங்கு இடம் பெறுகிறது.

**ஈழத்து சிறுகதைகளில் :-** புனைகதைத் துறை தொடர்
பக்கம் 40
பாக பல்வேறு தலைப்புகளில் ஜெகநாதன் இலங்கை வானொலியின் கலைக் கோலம் சஞ்சிகை நிகழ்ச்சியில் சில கட்டுரைகளை வாசித்துள்ளார். ஈழத்துச் சிறு கதைகளின் பிரதேசப் பிரதிபலிப்பு என்ற கட்டுரை மாதிரிக்காக இங்கு இடம் பெறுகிறது.

**கண்டோம் :-** 'கண்டோம் கருத்தறிந்தோம்' என்றதலைப்
பக்கம் 42
பில் சுடர் இதழில் வெளியான ஜெகநாதனின் இலக்கியச் செவ்வி ஒன்றும் சேர்க்கப் பட்டுள்ளது.

**எங்கள் குடும்பத்தில் :-** வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல,
பக்கம் 44
சக எழுத்தாளர் ஒருவர் மறைந்த காலத்திலும் அஞ்சலி செலுத்தி மனம் ஆறினர் ஜெகநாதன். எமது நிறுவனத்தில் பணியாற்றிய இ. பெர்னட் நினைவாகவும் இக் கட்டுரை இடம் பெறுகிறது.

**நவீன இலக்கியத்தில் :-** விமர்சனத்துக் கென்று ஒரு நூலை
பக்கம் 46
எடுத்தால், அதில் உள்ள சிறப்பம் சங்களைத் தேடி எடுத்துக் காட்டுவது இவரது விமர்சன மரபாக இருக்கிறது. குறைகளை நாசுக்காக சுட்டிக் காட்டுவதும், நிறைகளை வியந்து போற்றுவதும் அவரது இயல்பாக இருந்தது. பண்டைய மருத்துவத்தில் மூலிகைகள், வன்னிவள நாட்டார் பாடல், மனித புராணம், என்று பல்துறை சார்ந்த நூல்களையும் விமர்சித்துக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். ''இரு வேறு உலகம்'' என்ற நூலின் விமர்சனம் இங்கு இடம் பெறுகிறது.



**இலக்கிய மேடை :-** கலாவல்லி இதழில் ''இலக்கிய
பக்கம் 49
மேடை'' என்ற தலைப்பில் சில கட்டுரைகளை எழுதினர் காவலூர் எஸ். ஜெகநாதன். இலக்கியத் துறையின் சமகாலப் பிரச்சனை சிலவற்றைத் தனது தனியான பாணியில் அலசினர். அத்தொடரின் முதலாவது கட்டுரை இடம் பெறுகிறது.

**இலக்கியச் சந்திப்பு:-** ஜெகநாதன், சில்லையூர் செல்வராசன்
பக்கம் 53
ஆகியோரின் 'சுடர்' இதழுக்கான இலக்கிய சந்திப்பு, உரையாடலின் சிலபகுதி இங்கு தரப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பு மட்டுமன்றி, மூத்ததலைமுறை எழுத்தாளர்களை பேட்டி கண்டும் சில எழுதியிருக்கிறார். அவற்றுள் அகஸ்தியர் பேட்டி குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோசலிசம்

எழுபதாம் ஆண்டு பொதுத் தேர்தலில் 'அரிசி' பிடித்துக் கொண்ட இடத்தை கடந்த மாதம் நடந்த பொதுத் தேர்தலில் சோசலிசம் பிடித்துக் கொண்டுவிட்டது. 'சோசலிசம்' பற்றிப் பேசாத அபேட்சகர்களே இல்லை. மக்களோ புரியாமல் வாய் பிளந்தார்கள். 'அரிசி' எல்லாருக்கும் தெரிந்த ஒன்று. ஆனல் 'சோசலிசம்' என்ற வார்த்தையின் சரியான விளக்கம் பலருக்குப் புரியாத ஒன்று.

சேலைத்தலைப்பு சோசலிசம், முதலாளித்துவ சோசலிசம் என்றெல்லாம் வகைப்படுத்தப்பட்ட இந்த 'சோசலிசம்' இரண்டு கொத்து அரிசி தருமா? என்று வினு எழுப்பியவர்களும் உண்டு. அவர்கள் செய்தது உண்மையான சோசலிசம் அல்ல என்றெல்லாம் வர்ணிக்கபபட்டது. ஏதோ ஒன்று நன்மையானது. ஒளிமயமானது. நமக்குப் புலப்படாதது சோசலிசம் என்ற பெயருடன் இருக்கிறது என்று மக்கள் எண்ணத் தொடங்கியிருக்கலாம். கண்டபின் தாஞ நம்புகிறோம். 'கடவுளை' நம்பவில்லையா?

தெரிந்ததைத் தருவோம் என்ருல் தான் 'வில்லங்கம்' மக்களுக்கு தெரியாத ஒன்றை தருவோம் இன்று உறுதியளிப்பதில் 'பிரச்சினை' இல்லை என்று நினைத்தார்களோ என்னவோ? 'சோசலிசம்' வார்த்தையைத் தாராளமாகப் பாவித்த பலருக்கே அதன் விளக்கம் தெரியுமோ என்பது சந்தேகமானது தான்.

இந்த சோசலிசப் 'பயணம்' என்ருலும் அது எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்; இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற இலக்கை நோக்கியதாக இருக்கச் செய்வது ஆள வந்தவர்களினது மட்டுமல்ல அனைவரினதும் கடமையாகும்.

கலாவல்லி மே 1977



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நால்வர் நவின்றவை

## இங்கு ஒரு கேள்விக்கு நான்கு முஸ்லிம் எழுத்தாளர்கள் பதிலளிக்கிறார்கள்

கேள்வி : தமிழ் இலக்கியம் என்று பரந்த அடிப்படையில் செயல் படாது, இஸ்மாமியத் தமிழ் இலக்கியம் என்று பாகு படுத்துவதன் நன்மை தீமைகளைக் கூறுக?

மருதூர்க்கொத்தன் :- (வாப்பு மரிக்கார் முகம்மது இஸ்மாயில்)

இலக்கியத்தை மொழியினடிப்படையில் நோக்குவது தான் சரியானது. அதுவே எனக்கு உடன்பாடான அணுகு முறை, பார்ஸி இலக்கியம், அரபு இலக்கியம், உருது இலக்கி யம் என்றுதான் பேசப்படுகிறதே யொழிய, இஸ்லாமிய அரபு இலக்கியம் பார்ஸி இலக்கியம் என்று பேசப்படுவதில்லை.

மணிவாசகரின் திருவாசகத்தையும், ஆண்டாளின் திருப் பாவையையும், குணங்குடி மஸ்தானின் திருப்பாடல்களையும் படிக்கின்ற போதெல்லாம், தமிழின் இழுமென ஒழுக்கும் அழ கும் இனிமையுந்தான் மேலோங்கி நிற்பதைக் காணலாம். கடவுளை அவை எப்பெயர் கொண்டு வகுத்தாலும் இறைவன் மீது நாம் கொண்ட எல்லையற்ற தெய்வீகக் காதலையே புலவர்கள் அவற்றினூடாக வெளியிடுகிறார்கள்.

உண்மை இப்படி இருப்பினும் இஸ்லாமிய தமிழிலக்கி யம் என்ற பதப்பிரயோகம் நிறுவப்பட்ட சங்கதியாகிவிட் டது. அதை இனி அழித்தெழுத முனைவது ஆரோக்கிய மாகவும் அமையாது.

தமிழில் முஸ்லிம் புலவர் பெருமக்கள் செய்துள்ள இலக் கிய முயற்சிகளை விரிவாய் ஆராயும் நிலைமை ஏற்பட்டிருப் பதை நன்மையான பெறுபேறெனலாம்.

விபரம் புரியாத சிலர் சமயத்தையும் இலக்கியத்தையும் கலக்கியடிக்க முனைவதும், சீறுவிலும் மஸ்தான் ஸாஹிபு பாடல்களிலும் இஸ்லாத்துக்கு விரோதமான கருத்துக்கள் இருப்பதாகக் கூறி அவற்றை நிராகரிக்க வேண்டுமென்று இலாக்கணம் வைப்பதும் பிரித்து நோக்குவதால் எழுந்த தீமையான பெறுபேறு எனலாம்.

எம். வை. எம். மீஆது பி. ஏ:-

தமிழ் இலக்கியம் என்னும் போது, தமிழ் மொழி பேசும் சகல சமய இனத்தவர்களும் படைப்பவையே. பல்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்களாயினும் தமிழ் மொழியில் கதை கட்டுரை, கவிதை, நாவல் போன்றவற்றை ஆக்குபவர்கள் தமிழ் இலக்கியத்தையே வளமூட்டுகின்றனர்.

இஸ்லாமிய மதசார்பான கருக்களை உள்ளடக்கியதாக நாவல்கள் சிறுகதைகள், நாடகங்கள் படைக்கப்பட வேண்டி யுள்ளன, அவற்றை முஸ்லிம் வாசகர்கள் வெறும் கலை ரசனைக்காக மாத்திரமன்றி, தமது சமயக் கருத்துக்களை புரிந்து கொள்வதற்காகவும் வாசிப்பது, இதுவே என்னைப் பொறுத்தவரை இஸ்லாமிய இலக்கியம் என்று பாகுபடுத்தி இலக்கியம் படைப்பதன் நன்மையாகும்.

'பாகுபாடு' என்ற சொல்லை இங்கு பிரயோகிப்பதை விட 'வகுத்து நோக்கல்' எனக் கூறுவதே பொருத்தமாகத் தெரிகின்றது. பாகுபாடு என்னும்போது, இன, மத, பாகு பாடு என்று குறுகிய பொருளைத் தருவது போல் தோன்று கின்றது. எனவே, ஏனைய சமயங்களை, கொள்கைகளைக் கிண் டல் செய்யும் வகையில் இஸ்லாமிய இலக்கியம் அமையு மாயின், அவ்வாறு பாகுபடுத்துவது தீமை தரவல்லது, இலக்கியம் எதுவாயினும், அது மக்களிடையே ஒற்றுமை, சமரசம், இணக்கம், சகிப்புத்தன்மை ஏற்படுத்தக்கூடியதாய் அமையவேண்டும்.

இஸ்லாமிய இலக்கியமென தனித்து வகுத்திடும்போது, அதன் வளர்ச்சிக்கு முஸ்லிம் சமுகத்தனவந்தர், தலைவர்களிட மிருந்து பெரும் உதவிகள் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது. இது ஒரு நன்மையாகத் தென்படினும், இஸ்லா மிய இலக்கியங்களையும் தமிழ் இலக்கியப் பரப்பில் வைத்து மதிப்பதே நவீன கால சமூக கலாசார இணக்கத்துக்கு ஏற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நயீமா சித்தீக்:-**

தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட சைவ, வைஷ்ணவ, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத்தினர் அனைவருமே தமிழ் மொழியில் இலக்கியங்களைப் படைத்துள்ளனர். எல்லாமதத்தினரும் தமிழ் மொழியில் தம் பங்களிப்பினைச் செய்திருந்தாலும் இன்று கிறீஸ்தவ இலக்கியம் என்றோ சைவ இலக்கியம் என்றோ பேசப்படுவதில்லை.

ஆனால் இஸ்லாமிய மதத்தினரால் ஆக்கப்பட்ட தமிழ் இலக்கியம் ''இஸ்லாமிய இலக்கியம்'' என்று பேசப்படும் அளவுக்கு தன்னிலையால் உயந்திருக்கிறது- இது பெருமைக்குரிய ஒரு விடயமும்தான்

இஸ்லாமிய மதம் தனக்கேயுரிய கலை, கலாசாரம், பண்பாடுகளைக் கொண்டது. இஸ்லாமியர்களுடைய வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் இந்த தாக்கங்களை நாம் கண்கூடாகக் காணமுடியும் அத்துடன் அரபுமொழியின் தாக்கமும் உண்டு. எனவே, இந்தப் பின்னணியில் அமைந்த இலக்கியம் இஸ்லாமிய இலக்கியம் என்று தனித்து நோக்கப்படுவதே சிறந்தது.

இஸ்லாமிய இலக்கியம் என்று தனித்து நோக்கும் போது தமிழறிந்த எல்லாரும் வாசிக்கப் பின்னிற்பதை நாம் கவலையுடன் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். (சிறுகதைகள், நாடகங்கள் நாவல்கள், என்பன சற்று விதிவிலக்காகும்.)

**ஏ. எஸ். உபைத்துல்லா:-**

இஸ்லாமிய இலக்கியம் என்னும்போது இஸ்லாமிய மத சம்பந்தமாக தமிழில் எழுதப்பட்டவைகளோ அல்லது இஸ்லாமியர்களால் தமிழில் எழுதப்பட்டவையோ என்ற கேள்வி எழுகின்றது.



பிரபல எழுத்தாளர் கே. ஏ. அப்பாஸ் உருது மொழியில் எழுதியவைகளையும், வைக்கம் முகம்மது பஷீர் மலையாளத்தில் எழுதியவைகளையும், உருது இலக்கியம், மலையாள இலக்கியம் என்று சொல்கிறார்களே தவிர இஸ்லாமிய இலக்கியம் என்று முத்திரை குத்தப்படவில்லை.

இஸ்லாமிய எழுத்தாளனின் படைப்புகள் எந்தவொரு குறுகிய கட்டுக்குள் அடங்காது, உமர்கையாமின் கவிதைகளைப் போல உலக இலக்கியமாக மிளிர வேண்டுமென்பது'தான் ஆசை! அதைவிட்டு குறுகிய வரம்புக்குள்ளே இஸ்லாமிய எழுத்தாளர்களைக் கட்டிவைக்கப் பார்ப்பது அரசியல்வாதிகளுக்கு ஆதாயமாக இருக்கலாமே தவிர, இலக்கியம் சேமமாக முகிழ்க்க முடியாது.

—சுடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டங்கள் தோறும்

# தோட்டப் பாடசாலைகளின் அவல நிலை

தோட்டங்கள் தோறும் நேரில் சென்று அங்குள்ளவர்களைச் சந்தித்து அவர்களின் வாயிலாகவே தோட்டங்களிலுள்ள குறைபாடுகளை சந்தித்தவர்களின் புகைப்படங்களுடன் வெளியிடுவது முதலில் எமது நோக்கமாக இருந்தது. தமது 'பிரச்சினைகளை' தமது பெயர் படங்களுடன் வெளியிட சாதாரணமான மக்கள் சம்பந்தப்பட்ட மக்கள் தயங்குகிருர்கள். விளைவாக எந்த சக்தியும் நம்மைக் பழிவாங்கிவிடுமோ என்ற இயல்பான பயம், ஆனல் நாம் அவர்களின் குறைபாடுகளை அம்பலப்படுத்தும் துணிச்சலுள்ளவர்கள். விளைவாக அவர்களிடம் பெற்றதை நான் தருகிறேன்.

மாத்தளையில் இருந்து ஒருமைல் தூரத்தில் உள்ளது வாரியப் பொலத் தோட்டம் தொழிலாளர் நலக் கருத்தரங்கு ஒன்றை நடத்திய தோழர்கள் அழைத்திருந்தார்கள் போயிருந்தேன். தோட்டப் பாடசாலை ஒன்றில் கருத்தரங்கு நடந்தது. பாடசாலை என்பதை நான் முதலில் நம்பவில்லை. என்னுடன் வந்த புகைப்படக் கலைஞர் பாலா படம் பிடித்துப் பிரசுரித்தால் 'இது பாடசாலையல்ல பொய்' என்பீர்கள். வேண்டாம் என்று விட்டேன்.

முப்பதுக்கு இருபது யார் நீள அகலமுள்ள ஒரு பாழடைந்த மடம். நிலத்துச் சிமெந்து மறைந்துவிட்டது. 'பிசுபிசு' என்று ஒட்டியது. சகதியோ என்று பயந்துவிட்டேன். கருத்தரங்குக்காக மெழுகினூர்களாம். படுகிழவனின் நிலையில் இருந்த 'பள்ளிக்கூடத்துள்' ஒரு சில பழைய வாங்குகள் எனக்கு இருக்கப் பயமாக இருந்தது.

மாடுகள் அடைக்கும் பட்டியை விட கேவலமான நிலை. மூச்சுவிடக் கஷ்டப்படும் அதனுள் ஐந்தாம் வகுப்பு வரை படிப்பிக்கிருர்கள். ஐந்து ஆசிரியர்கள் வந்துபோகிருர்கள். அது வேறு உலக அதிசயம் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது தொங்கவிட்டிருந்த பெட்ரோல் மாக்ஸ் கழன்று



விழுந்தது. பயந்து போனேன். 'நல்ல வேளை கூரையே விழாமல் விட்டது. ஆறுதல் கூறுகிருர். ஒரு கிழவர்.

உண்மைதான் கூரை எப்போது விழும் என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம் புத்தி தெரியத் தொடங்கும் பருவத்தில் ஆரம்பக் கல்வி பெறப்போகும் இடத்தில் இருப்பிடமே இப்படி ஒரு அவலம் என்ருல் அதுவும் கல்வித் துறைக்கு கோடி கோடியாக அரசு பணம் ஒதுக்கும் நாட்டில்

இதுதான் மலையகத் தோட்டப் பாடசாலைகள் பெரும்பாலானவற்றின் நிலை என்கிருர் நண்பர் ஒரு சோறு பதம்.

வாரியப்பொலத் தோட்டப் பாடசாலையைப் பார்த்தால் தோட்டச் சிருர்களது எதிர்காலத்தை நினைத்து கண்ணீர் தான் வரும் கல்விக் கண் திறக்கவிடாமல் இளமையிலேயே குருடாக்கும் நிலை.

இலந்தவெலத் தோட்டத்தில் தலை கீழ் நிலை சிறிதாலும் நல்ல கட்டிடமுண்டு ஐந்து வகுப்புக்கும் ஒரே ஒரு ஆசிரியர் அவர் ஓடியோடி மேய்ப் பதில் விளைவு பூச்சியம். இப்படி இப்படித் தோட்டப் பாடசாலைகளில் அவல நிலையின் பட்டியல் வெகு நீளம். ஆசிரியர்களிடம் அக்கறையில்லை. வெறும் மாடு கன்று மேய்ப்பது போன்ற உணர்வு அப்படியாஞல் அவர்கள் ஆசிரியர் என்று அழைக்கப்பட வேண்டியதில்லையே சிருர்களுடன் அன்பு ஆதரவுடன் நடப்பதில்லை. வெறும் பொழுதுபோக்கும் மனோபாவம்.

மலையகத்து சமூகச் சிற்பிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய முக்கிய பிரச்சினை இது.

*தினகரன் 17 யூலை 1980*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பிறந்த மண்ணிற்குப் பெருமைதரும் ஜெகநாதன்"

ஈழத்து இளம் எழுத்தாளர்களில் எழுச்சிச் சின்னமாக விளங்கும் காவலூர் ஜெகநாதனுக்கு இளம் வாலிபர்கள் பாராட்டுவிழா நடத்திப் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கும் நிகழ்வறிந்து அகமிக மகிழ்கின்றேன்.

தீவகத்து மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் தீந்தமிழர் வரிசையில் முன்னணிப் பிரமுகராக நிற்கும் இவ் எழுத்தாள நண்பர் மூன்றாண்டுகளில் பதினாறு போட்டிகளில் முதற்பரிசுகளைத் தட்டிக்கொண்டமை ஒரு சரித்திர நிகழ்வென்றால் அது மிகையல்ல. மக்களை ஈடேற்றவல்ல மகோன்னத கருத்துக்களை அடிப்படையாக வைத்து தன் பணியைத் திறம்படப் புரியும் நண்பரின் இச்சேவை எதிர்கால சந்ததிக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்திருக்கிறது.

பண்டைக்காலத்திலே சிறப்புக்குரியோர் அவரவரின் வாழ்நாளின்போதே பாராட்டப்பட்டதோ, கௌரவிக்கப்பட்டதோ இல்லையென்றே சொல்லலாம். அந்த இழிநிலையை மாற்றி பாராட்டப்பட வேண்டியோர் அவர்களது கண் முன்னேயே கௌரவிக்கப்பட வேண்டுமென்ற உண்மையை உணர்ந்து இன்றைய இளம் வாலிபர் திருக்கூட்டம் இப்பாராட்டு விழாவை எடுப்பதையிட்டு ஒவ்வொரு இளைஞனும் பெருமைப்பட வேண்டும்.

**சட்டத்தரணி கே. எஸ். மகேந்திரன்**
*ஈழநாடு சிறப்புமலர் 18-8-1979*



# இளைஞர் நெஞ்சில் கனலும் நெருப்பு!

விடிந்துவிட்டதா? இன்னும் பறவைகள்கூட துயில்கலையவில்லையே. ஆனால் என்ன? பணமே நினைப்பாக உறக்கமின்றி புரண்டுகொண்டிருந்த ஓட்டல் முதலாளி எழும்பிவிட்டாரே! அடித்து எழுப்பப்படுகிறார்கள் தொழிலாளர்கள். இயந்திரங்கள் இயங்கத் தொடங்கிவிட்டன.

சமையல் பகுதிக்குள் வேலை. நெருப்பின் காங்கைக்குள் வியர்வையில் குளித்தபடி வேலை. அது முடிய நிலம் வெளுக்கிறது. வானெலியில் காலைக் கதிர் கதறுகிறது.

அடித்துப் பிடித்துக்கொண்டு தயாராகி முன்பகுதிக்கு வந்துவிட்டார்கள். 'ஒரு பிளெயின் ரீ' கொட்டாவி விட்டபடி வரும் பக்கத்துக் கடைத் திண்ணைத்தூங்கி முழுவியளம். தொடர்ந்து வாறவன் போறவன் எல்லாரும் சொல்வதற்கெல்லாம் ஓடியோடி அவன் விரும்பும் விதம் விதமான சாப்பாட்டுகளை பரிமாறி அவை எல்லாவற்றையும் அவன் சாப்பிடமுடியுமா?

சனம் குறைந்த இடைவேளையில் சாப்பிட முனைகிறான் அதற்கும் காரணமில்லாமல் முதலாளியின் முணுமுணுப்பு.. இந்த ஒரு வேலையில் மட்டும்தான் முழுக்கவனம்.

மீண்டும் இயந்திரம் இயங்குகிறது.

சாப்பாட்டின் தரக்குறைவு, பரிமாறுவதில் தாமதம், இவற்றால் ஏச்சுக்களை கணக்கின்றி பெற்றுக்கொள்வது இவர்கள் கல்லாப்பெட்டியில் அமர்ந்திருந்து கணக்கோடு பணத்தைப் பெறுவது முதலாளி,

மாலையும் செத்துவிடுகிறது.

களைப்பின் உச்ச நிலையில் அவர்கள் நாளொன்றுக்கு எட்டு மணி வேலை என்ற சட்டமெல்லாம் அவர்களுக்கில்லை; அவர்களையும் மனிதர்கள் என்று முதலாளி கருதினால் அல்லவா அமுல் நடத்துவதற்கு. கடை அடைக்கும்போது இரவு பதினொரு மணி.

சாக்கு ஒன்றை விரித்துவிட்டு தலைக்கு அணையாக பேப்பர் கட்டு, அந்தக் களைப்பிலும் உறக்கம் வராமல் மனம் அலைபாய்கிறது. வந்துவிட்டுப்போன சில பெண்கள், ஞாயிறு பார்த்த படத்தின் கதாநாயகி கையில் விரிந்திருப்பது வயது வந்தவர்களுக்கு மட்டும் என்று கவரில் அடித்து காசு கொடுத்து வாங்காமல் பிரித்துப்பார்க்க முடியாதவாறு 'கிளிப்பண்ணிய' விபச்சாரியின் பாணி. செக்ஸ் புத்தகம், மறுமலர்ச்சி எழுத்தாளர் எழுதியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலே மனம்விட்டு சுகம்கண்டு, நினைவு, கனவு எல்லாமே அதுவாக. எப்போது தூங்கினேனோ.

'படார்' அடித்து எழுப்பப்படுகிறான்.

அவனது ஒரு நாள் அல்ல, ஒரு யுகம் முடிந்து மறு யுகம் ஆரம்பமாகிறது. அவனது வாழ்வை எண்ணிப் பாருங்கள் மாதம் முடிந்தபின், இது அது என்று கணக்கு முடித்து முதலாளி கொடுக்கப்போகும் சிறு தொகைப் பணத்தையும் எண்ணிப் பாருங்கள், கொடுமை இல்லையா?

ஓட்டல்களில் மட்டுமல்ல இப்படி.

பலசரக்கு கடைகள்போன்ற பல தனியார் நிறுவனங்களிலும் இதே நிலைதான். உழைப்பு அவசியம்தான் அந்த உழைப்பு, மனிதன் மனிதனாக இருந்து வழங்கவேண்டியது. நிர்ப்பந்தத் தின்பேரில் இயந்திரமான எல்லை கடந்து அடிமையிலும் கேவல மாக பிழியப்பட்டு பெறப்படுவதல்ல. சில இடங்களில் குறைந்த அந்தக் கூலிகூட ஒழுங்காக கொடுக்கப்படுவதில்லை.

உடல் கசங்காமல் உயர்ந்த சம்பளம் வாங்குபவன் வந்து வயிறு புடைக்க உண்கிறான். உடல் கசங்க உழைப்பவன் அந்த உணவுகளைப் பார்ப்பது மட்டும்தான். உண்பது பழையதுகளை.

இதுவெல்லாம் நமது சமூகத்தில் நீதியாக்கப்பட்டிருக்கிறது. அந்த நீதிகளைப் போட்டுடைக்க வேண்டியது இளைஞர் நம் பொறுப்பல்லவா?

தினகரன்



# உளவியல் மஞ்சரி 'நான்'

இலங்கையில் ஒரு தமிழ்ச் சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிடுவதென்பது ஒரு பெரிய காரியம், அதுவும் ஒரு துறை சார்ந்து அதற்கென்றே இதழை வெளியிடுவது மலைப்பூட்டும் விடயம். அதனைச் செயலில் சாதித்திருக்கிறார்கள் அ. ம. தி. இல்லத்து இளைஞர்கள். அதுதான் 'நான்' என்னும் உளவி யல் மஞ்சரியாக கடந்த ஏழு ஆண்டுகளாக வெளிவந்து கொண் டிருக்கிறது. கையடக்கமான அழகிய அமைப்பில் சிறந்த முறையில் தொடர்ந்து வெளிவருகிறது 'நான்'.

இரு மாதத்துக்கு ஒன்றாக வெளிவரும் இதழ்களில் ஒவ் வொன்றுக்கும் ஒரு தலைப்புக் கொடுத்து அத்தலைப்பின் கீழ் ஆக்கங்கள் பெறப்பட்டு, பிரசுரிக்கிறார்கள். உதாரணத்துக்குச் சில தலைப்புகள் - தவறு, விதி, பயன், மனித செயற்பாடுகள், உளப்பிறழ்வு...

'நானில்' வெளிவரும் படைப்புகள் உளவியல் துறையில் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமன்றி, அனைவருக்குமே பயன் தரும் வகையில் அமைந்துள்ளன. ஆரோக்கியமான மனவளர்ச்சி யுள்ள சமூகத்தை நிர்மாணிக்கும் நோக்கில் சிறப்பாக படைக் கப்படுகின்றன. வி. பற்றிக், கார்டோசா போன்றவர்கள் பயன் மிகு கட்டுரைகளை அளித்துள்ளார்கள். 'நான்' இதழ் களில் வெளிவந்துள்ள கட்டுரைகளை நோக்கும்போது அவை தொகுதியாக வெளியிடப்பட வேண்டும் என்ற அவா உண் டாகிறது.

இம் மாதம் 'பயம்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இதழில் 'பயத்திற்கே பயப்படு' என்ற யோ. கார்டோசாவின் கட்டுரை, பயமே உன் விலை என்ன? என்ற ஸ்ரனி அன்ரனி யின் கட்டுரை, குழம்பிய நிலையும் குழம்புகின்ற காரணிகளும் என்ற புலவர் ஒலியின் கட்டுரை, ஆபத்துகளும் ஆக்கச் செயற் பாடுகளும் என்ற ஜீவா ரூபால் எழுதிய கட்டுரை, ஆசிரியர் வி. பற்றிக்கின் 'அச்சத்தை முறியடிக்க ஆறு முறைகள்' கட்டுரை ஆகியன இடம்பெற்றுள்ளன. இவையாவும் கட்டுரை ஆக்கச் சிறப்புப் பெற்றுள்ளன என்று விதந்துரைக்க முடியா விட்டாலும், உள்ளடக்கத்தால் பொலிவு பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் சிறுகதை இலக்கியத்தில் உளவியல் ரீதியான அணுகுமுறை கொண்ட படைப்புகள் அரிதாகவே படைக்கப் பட்டுள்ளன. அத்தகைய படைப்புகளுக்கு 'நான்' களம் கொடுத்து ஊக்குவிக்கிறது. தொடர்ந்து 'நானி'ல் உளவியல் சிறுகதைகளை எழுதி வந்துள்ள காவலூர் எஸ். ஜெகநாதன் ஒரு மாறுதலாக இம்மாத இதழில் 'இந்த இதழிலிருந்து' என்ற கவிதையை எழுதியுள்ளார்.

'நான்' இதழ், கவிதைகள் பல்வற்றையும் வெளியிட்டிருக்கிறது. எழுதும் ஆர்வம் கொண்ட இளைஞர்களை ஊக்குவித்தும் மன உளைச்சலால் வருந்தும் இளையவர்களை உற்சாகப் படுத்தியும் 'நான்' ஆற்றிவரும் பணி கவனத்துக்குரியது.

'கருத்துக்குயல்' என்ற தலைப்பின் கீழ் இதழின் தலைப்பை ஒட்டி வாசகர்களிடம் கருத்துக்கள் பெற்று வெளியிட்டு வருகிறார்கள். 'நான்' எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கங்கள் அவர்களது இலட்சிய மயமான தீவிரத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. ஒவ்வோர் இதழிலும் 'வாசகர் அறிமுகம்' என்ற பகுதியில் வாசகர்கள் தம்மை அறிமுகப் படுத்துகிறார்கள். சுவையும் பயனுமிக்க பகுதி அது.

'நான்' வெளியீடு ஒரு காத்திரமான முயற்சி.

தினகரன்



# இலக்கியத்துறையில் இளைய தலைமுறை

**1976**-ம் ஆண்டு நான் இலக்கியத் துறையின் நுழை வாயிலில் நின்றநேரம், யாழ்ப்பாண வளாகத்தில் வைத்து கலாநிதி சண்முகதாஸ் அவர்கள்தான் அவரை எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். எனது சொந்த ஊரிலே ஓர் இலக்கியக் கூட்டம். தேவன், சொக்கன், மனோன்மணி சண்மிக தாஸ்...... இப்படி ஓர் இலக்கியப் பட்டாளமே ஒரேயொரு காரில் எப்படிப் போவது என்ற திண்டாட்டத்தில் விரல்விட்டு தலைகளை எண்ணிக்கொண்டிருந்தபோது அவரை நான் கணக்கில் எடுக்கவில்லை. அதற்கான, தேவை இல்லையென்ற எண்ணம். ஒரு குழந்தைப்பிள்ளை நெருங்கிக்கொண்டு இருக்கக் கூடிய இடம் அவருக்குப் போதும். மிஞ்சிப்போனால் மடியிலாவது வைத்துக்கொள்ளலாம்.

அதுவேதான் நடந்தது. பதினைந்து மைல்கள் அவர் என் மடியில் அமர்ந்திருந்தபோது, கனமே தெரியவில்லை. உடலில் 'கனம்' இல்லாதபோதும், ஆள் 'ரொம்ப' கனமானவர்தான் என்பது கூட்டத்தில் அவர் பேசிமுடிந்தபின்தான் எனக்குப் புரிந்தது.

துரை மனோகரனுக்கு மெலிந்த உடல். எதிர்க்காற்றிலே அவர் தலையை அசைத்துக்கொண்டு 'பாடுபட்டு' வரும்போது பாவமாக இருக்கும் ஆனால் ஆற அமர சில மணித்தியாலங்கள் 'இலக்கியம்' பற்றிக் கதைக்கத் தொடங்கினால், அந்தப் பாவமே பொறாமையாக மாறும். அத்துணை ஆழமான கருத்துக்களைத் தன்னுள்ளே புதைத்து வைத்திருக்கிறார், இந்த இளைஞர்.

'பாவையின் பரிசு'- ஈழத்திலே இதுவரை வெளிவந்த நாவல்களிலே ஒரு வித்தியாசமான நாவல். பெண்ணென்றால் பேயுமிரங்கும்-இது பழமொழியளவில் இருக்கின்றது. பெண்ணிற் பெருந்தக்கயாவுள-இது ஏட்டளவில் இருக்கிறது. பெண்ணின் நிலை உயரவேண்டும். அவள் தெய்வம்-இது பேச்சளவில் இருக்கிறது. செயலளவில் கொடுமை, பழி, பலாத்காரம், இவைகள்தான் இருக்கின்றன. பெண் உயர்ந்தவள் - தெய்வம் எல்லாம் பொய்யாய், பழங்கதையாய் போய்விட்டன. இன்று மிஞ்சியிருப்பது? பெண் ஒரு இயந்திரம். இந்த இதயக்குமுறலை அடிப்படையாகக்கொண்டு பாவையின் பரிசிலே பெண்ணினத்தின் பரிதாபக் குரல்கள் கேட்கின்றன. அதை ஒரேயொருவன்தான் கேட்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன்தான் துரைமனோகரன், அதுவும் தனது பத்தொன்பதாவது வயதிலே உரும்பிராய் இந்துக்கல்லூரியிலே உயர்தர வகுப்பு படித்துக்கொண்டிருக்கும்போது எழுதி அந்த நாவலை வெளியிட்டிருக்கிறார் என்றால்...... மூக்கிலே விரலைவைத்து வியக்கத் தோன்றவில்லையா?

கலையரசு சொர்ணலிங்கமே வியக்கிறார். 'இளைஞர் மனோகரனின் பேனா என்ற தூரிகை தமிழ் என்ற வண்ணக் கலவையைத் தோய்த்து எம் மனத்திலே அழியாது வரைந்துவிட்டது என்று'

'ஆண்களின் குற்றங்களைப் பெண்கள் அவர்களிடம் சொல்லும்போது தமது குற்றங்களை மறைப்பதற்காகப் பெண்களை அடித்தும் கடிந்தும் துன்புறுத்துகிறார்கள். இதுதான் அவர்களின் மான உணர்ச்சியாக்கும்' இப்படி பாவையின் பரிசு முழுவதும் கருத்துக்குவியல்கள் சிதறிக்கிடக்கின்றன. நாவலை வாசித்து முடிக்கும்வரை மு. வரதராசனின் நாவலைப் படிப்பது போன்ற எண்ணமே மேலோங்கி நிற்கும்.

வெளியீட்டு விழாவிலே நாவேந்தன் அவர்கள் அதைக் கூறியிருக்கிறார். மு. வ. வின் நாவலைப்போல் கருத்துக்கள், பாத்திர வார்ப்பு மட்டுமின்றி மொழிநடைகூட பின்பற்றப்பட்டிருக்கிறது என்று.

அண்மையிலே பேராதனையிலே அவரது இல்லத்தில் சந்தித்தபோது இவற்றை சுட்டி மு. வ. வின் நாவலைப்பற்றி முற்போக்கு விமர்சகர்களிடையே ஒருமாதிரியான கருத்து உள்ளதல்லவா? இன்று விமர்சகராகவும் பரிணமித்திருக்கும் நீங்கள் உங்கள் நாவலைப்பற்றி இப்போது என்ன நினைக்கிறீர்கள்?

துரைமனோகரனுக்கு கள்ளமற்ற உள்ளம். கதையைத் திருடிவிட்டே கற்பூரத்தின்மீது அடித்து சத்தியம் செய்பவர்கள் உள்ள இலக்கியத்துறையில் இவர் ஒரு தனிப்பிறவி.

மு. வ. வின் நாவல்களை அனைத்தையும் படித்து அந்த அருட்டுணர்வால்தான் நான் எழுதினேன். அவரைப் பின்பற்றியே எழுதினேன். ஆனால் இன்று அவரது நாவல்கள் நாவல்களே அல்ல; வெறும் கருத்துக்கோவைகள்தான் என்று தெளிவுபிறந்துவிட்டது. அவ்வகையில் பாவையின் பரிசும் ஒரு கருத்துக்கோவையே என்கிறார். இந்த நேர்மை யாருக்கு வரும்?

இந்தத்தெளிவோடு, வளர்ச்சியோடு ஒரு நல்ல நாவலை நீங்கள் தரவேண்டும் என்கிறேன். விரைந்து தருவேன் என்று உறுதியளிக்கின்றார் துரை மனோகரன். உரும்பிராயிலே துரைராசா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த இவருக்கு வயது 30.

இதைக் கூறினால் தத்துவத்துக்கு முரணாகிவிடுமோ? அதைக்



கூறினால் கட்சிக்காரருக்குப் பிடிக்காமல் விடுமோ? அவர்கள் என்ன நினைப்பார்களோ? என்றெல்லாம் தன்னுள்ளே இருக்கும் மனிதனைக் கொன்றுவிடாமல் மனதிலே இருப்பவற்றை-மனதுக்குத் தோன்றுவனவற்றை பட்பட்டென்று கூறுவார். கதைக்கத்தொடங்கினால் அவரை விட்டுப் போக மனம் வராது.

மனிதனை மனிதனாகவே பார்க்கவேண்டும். நாங்களும் மனிதர்களாகவே நின்று பார்க்கவேண்டும், மனிதாபிமானக் கண்ணோட்டமில்லாமல்-எதையெடுத்தாலும் தத்துவக் கண்ணோட்டததிலேயே பார்ப்பதை விரும்பவில்லை என்கிறார். அதுதான் நமக்கு முந்திய காலகட்டத்து எழுத்தாளர்கள் விட்டதவறு என்கிறார். மனிதனுக்காக தத்துவமே தவிர தத்துவத்துக்காக மனிதன் இல்லையே.

மனோகரனுக்கு இடதுசாரிக் கருத்துக்களிலே மிகுந்த பற்றுதல். இவரது முதலாவது சிறுகதை 'நான் கதை எழுதினேன்' தந்தை கதை எழுதுவதைப் பார்த்து தானும் கதை எழுத முற்பட்ட இளம் பையன் அடிவாங்கிய தன் கதையைக் கூறுவது. அது கதை. ஆனால் உண்மையோ முரணானது. இவரைக் கதை எழுத ஊக்குவித்ததே இவருடைய தந்தையார்தான். இதுவரை பத்துச் சிறுகதைகளை எழுதியிருக்கும் இவரது 'ஓர் அறையும் ஒரு நிலவும்' (மல்லிகை 77 ஜூலை) கதை வாசகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

மணம் முடிப்பதற்குமுன் ஒரு எழுத்தாளர் சுதந்திரமாக உற்சாகத்தோடு எழுதுகிறார். மணம் முடிந்ததன்பின் பொறுப்புக்கள், மனைவியால் சில சுமைகள், கசப்புகள், இவற்றால் சுதந்தரமின்றி எழுதமுடியாது மனநிலைக்கு ஆட்படுகின்றார். எழுத்தாளனுக்கு திருமணம் ஒரு சிறையாகவே மாறிவிடுகிறது. இதுதான் துரை மனோகரனின் 'சிறை' சிறுகதையின் கரு. எழுத்தை நேசிக்கும் எந்த எழுத்தாளனும் அதை வாசித்தால் திருமணத்தின்பக்கம் தலைவைத்தும் படுக்கமாட்டான். இவரும் அந்தப்பக்கம் தலைவைத்துப் படுக்காது 71-ம் ஆண்டுதான் கண்ட அனுபவமொன்றை - தனக்கும் நேர்ந்துவிடக்கூடாது என்ற பயத்துடன் எழுதுகிறார்.

இன்றோ ...... மனோகரன் திருமணம் முடிந்தபிறகு தனது கருத்தை மாற்றிக்கொண்டார். அமைகின்ற மனைவியைப் பொறுத்தது அது என்று, இவரது துணைவியார் கனகாம்பிகை படிப்பும் பண்பும் நிறைந்தவர். சோர்த்திருக்கும் இவரை உற்சாகப்படுத்துபவர். அவரே ''சும்மா பேசிக்கொண்டிருந்தால் காணும்......நீங்களும் எழுதவல்லோ வேணும்'' என்று கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரை மனோகரன் பேராதனை பல்கலைக் கழகத்திலே உதவி விரிவுரையாளராக கடமையாற்றுகிறார். பீ. ஏ. பட்டதாரி. தமிழிலே சிறப்புப் பட்டம் பெற்றவர். ஓவியத்துறையிலும் ஆர்வமுள்ளவர். 'மொடேர்ண் ஆட்ஸ்' போன்றவற்றை இவர் அடியோடு வெறுக்கிறார். உருவத்தை அழிக்கும் உருவம். இலக்கியத்தை அழிக்கும் இலக்கியம். இவற்றிலெல்லாம் இவருக்கு ஈடுபாடில்லை.

இது ஒரு சுவையான கதை.

எஸ். எஸ். சி. படிக்கும்போது ஒரு மாணவன் தமிழ்ப் பாடத்துக்கு கட்டுரை எழுதச்சொன்னால், இடையிடையே பெரிய கவிஞராகி தனது கவிதைகளையும் செருகுவார். வந்ததே பண்டிதருக்கு கோபம்......சிலர் பாட்டெழுதப் பார்க்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் பாட்டு வராது என்று வகுப்பில் மாணவர்களின் முன்னே அவமானப் படுத்திவிட்டார். அந்த மாணவனுக்கு ரோசம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. ஒரு சவாலாக தமிழ்க் கவிதை நூல்களையெல்லாம் கற்றார். கடுமையான உழைப்பு வீண்போகவில்லை. அந்த மாணவர் பல்கலைக் கழகத்தில் படித்தபோது 73ம் ஆண்டு பேராதனை வளாக தமிழ்ச் சங்கம் நடத்திய கவிதைப் போட்டியிலே முதல்பரிசைப் பெற்றார். 'ஏங்குகின்ற மூச்செல்லாம் எவரின் மூச்சு' என்ற கவிதையே பரிசைப் பெற்றது. பண்டிதருக்குத்தான் சொந்தமாகனது என்கிறார் அந்த மாணவர்.

அவர் வேறு யாருமல்ல நமது துரை – மனோகரனேதான் இவர் இலக்கியத்துறைக்கு கவிதையோடுதான் நுழைந்தார். பல கவிதைத் தொகுதிகளிலே இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இலக்கியத்தின் பல உள்துறைகளிலும் காத்திரமான ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாட்களில் 'சமூக நோக்கு' என்ற ஆய்வுக் கட்டுரை 'சிந்தனை' பிரசுரமாக வெளிவந்துள்ளது.

நாடகங்களில் ஆய்வு செய்தாரல்லவா ?

நாடகத்துறையிலே இவருககுத் தனியான ஒரு'பைத்தியம்' நான் விரிவுரையாளனாக வந்திருக்காவிட்டால், இதுவே தமிழகம் என்றால், ஒரு திரைப்படக் கதாசிரியனாகவோ - இங்கே நாடகத் துறையினுள்ளேதான் நுழைந்திருப்பேன் என்கிறார். இவரது மூன்று நாடகங்கள் பேராதனை பல்கலைக் கழகத்திலும், இரு நாடகங்கள் உரும்பிராயிலும் மேடையேறியுள்ளன. 'அன்பின் பேரால்—' என்ற நாடகம் ஐந்து தடவைகள் யாழ்ப்பாணப் பகுதியில் மேடையேறியது.

மனோகரன் நாடக ஆசிரியர் மட்டுமல்ல தரமான நடிகர்.



பேராதனை பல்கலைக் கழகத்திலே மேடையேறிய 'வேஷங்கள் வாழ்கின்றன' நாடகத்தில் தலைமையாசிரியர் தம்பிமுத்துவை மறக்கமுடியுமா? இப்போதும் கண்ணுக்குள்ளே களைக்கட்டவில்லையா? நினைவில் நிற்கும் பாத்திரம் என்ற பரிசையும் தம்பிமுத்துதான் இவருக்கு பெற்றுக்கொடுத்தார். இவரது பெண் வேடத்துக்கு அந்நாளில் பல்கலைக்கழக மாணவர் மத்தியில் தனியான ஒரு வரவேற்பு இருந்ததுண்டு.

இன்று தங்களைத் தாங்களே பிரபலமாக்கிக்கொண்டு தலைநகரில் இருக்கும் எம். ஜீ. ஆர். படத்தில் அடிவாங்கமட்டுமே லாயக்கானவர்கள் – பெரிய கலைஞர்களாக உலாவிவருவது எவ்வளவு வெட்கக்கேடு. கிராமங்களிலே, பல்கலைக்கழகங்களிலே உள்ள தரமானவர்களை நாடு இனம் காண்பது எப்போது என்று வேதனையோடு துடிக்கிறார்:

'இத்தனை ஆண்டுகளாக எத்தனையோ எழுத்தாளர்கள் எழுதினார்களே! சமூகத்திலே எந்த ஒரு பிரச்சனையையாவது தொட்டு வைத்தார்களா? இல்லையே! புதிய தலைமுறை எழுத்தாளர்களும் கண்மூடிக்கொண்டு அதே தடத்தில் செல்வதா?' பல அர்த்தங்கள் தொனிக்க கேட்கிறேன்.

பழையவர்கள் அடிப்படைப் பிரச்னைகளை உணராமல் சொந்த தாழ்வு சிக்கலில் ஆழ்ந்துகொண்டு எழுதினார்கள். இலக்கியம் யாரைச் சேரவேண்டுமோ, அவர்களைச் சேரவில்லை. எழுத்தாளர்கள் தம்மைச் சுற்றி தத்துவத்தில் கட்டிக்கொண்டு மக்களைவிட்டுப் பிரிந்துவிட்டார்கள்......துரை மனோகரன் மனம் திறந்து அடுக்கிக்கொண்டே போனார்.

காரணங்களைக் கூறிவிட்டார். இனி...... இவைகளைக் களைந்து இலக்கியத்தின்மூலம் சமூகப் பயனை விளக்கவேண்டும்.

''பொறுத்தது போதும் பொங்கி எழு மனோகரா..................! ஏனிந்த தேக்கம், வேகமாக உங்கள் பணி தொடரலாமே......'' இது எனது ஏங்குகின்ற மூச்சு. இந்த மூச்சு அணையை உடைத்தது.

''எதிர்காலத்தில் நிறைய எதிர்பார்க்கலாம்'' என்றார் இனி வெள்ளம் பாயும்.

—ஈழநாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதன் பெற்ற பாதுகை!

"பொன்மணி" படம் பார்ப்பதற்கு கலரி ரிக்கற் எடுத்து போனபோது கிடைத்த உபசாரம் கூட இருபத்தைந்து ரூபா ரிக்கட் எடுத்து "பரதன் பெற்ற பாதுகை" நாடகத்துக்கு போனபோது கிடைக்கவில்லை. இருந்தாலும் சரி, நின்றாலும் சரி உள்ளே போனால் காணும் என்பதுபோல் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக உள்ளே செலுத்தினர்கள். மேடையில் மந்தரை சூழ்ச்சிப்படலம் நடந்துகொண்டிருந்தது.

மந்தரையாக நடித்த மணிமேகலை எவ்வளவு நேரம்தான் முதுகைக் கூனியபடி நடித்துவிட்டார். குனிந்து நின்றே நடிப்பில் நிமிர்ந்துவிட்ட கதாபாத்திரம் அதுதான்! கைகேயியாக நடித்த செல்வி கைகேயியாக மாறிவிட்டபோதும் மேடைக்கேற்ற 'அழகு' இல்லாதது குறையாக இருந்தது...... மந்தரை வந்து போனபின் நாடகம் மந்தமாகத்தான் இருந்தது. ஹெலன் குமாரி வந்தார் - போனர். சமீபகாலமாக ஈழத்து நாடகத் துறையில் நம்பிக்கை நட்சத்திரமான ஜவாகர், குகன் பாத்திரத்தில் தன் முத்திரையைப் பதித்துக்கொண்டார்!

நாடகத்தின் கடைசிக் கட்டம் பரதன் இராமரைக் காட்டில் சந்திக்கிறன். இராமராக நடித்த சிவஞானத்தின் கால்களில் பாதுகை இல்லை. சபையோருக்கு அதிர்ச்சி. பாதுகையைக் கேட்கப்போகும் கட்டத்தில்தான் இராமர் ஓடிப்போய் பாதுகையைக் காலில் செருகிக்கொண்டு வருகிறர். ஒப்பனைகள் மிகையாகி 'பபூன்' கள் போன்று கதாபாத்திரங்கள் காட்சியளிக்கத்தான் வேண்டுமா?

"இராமர் பட்டாபிஷேகமே நடக்கவில்லை! கிரீடம் வைத்திருக்கிறர். தசரதனே கிழவன் ஆனல் தசதரனுக நடித்தபெர்னன்டோ இளைஞன் போன்று துள்ளிக் குதிக்கிறர். ஆண் கதாபாத்திரங்கள் யாவுமே பாத்திரம் உணர்ந்து நடிக்கப்படவில்லை" இவற்றையெல்லாம்நான் கூறவில்லை. இடைவேளையின் போது நடிகவேள் ஒருவர் கூறினர்.

ஆரம்பத்தில் மொய்த்துக்கொண்டிருந்த சனக்கூட்டம் இடைவேளையின் சற்றுப்பின் எங்கே மாயமாய் மறைந்துவிட்டதோ தெரியவில்லை. மேடையில் உள்ளவர்கள் மீதோ, அல்லது ரசிகர்கள் மீதோ! கண்டிப்பாக இரண்டில் ஒரு பக்கத்தில் ஏதோ ஒரு குறை உண்டு. கண்டுபிடித்து தீர்க்கவேண்டியது அவசரம் – அவசியம்!

கலாவல்லி



# அக்கரைப் பூக்கள்

தமிழக எழுத்துத்துறை பற்றி ஈழம் நிரம்பவுமே தெரிந்து வைத்திருக்கிறது. ஈழத்து முயற்சிகள்தான் பெரும்பாலும் அங்கு அறியப்படுவதில்லை. ஒரு வழிப்பாதையின் குறைபாடு இது என்று கூறப்படுகிறது. ஓரளவு உண்மை இருக்கிறதுதான். ஆனல் முழுவதுமான உண்மையை உணரும்போது கசப்பு நெஞ்சை நிறைக்கும். தமிழகத்தை நமது பெரும்பான்மையான வாசகர்கள் எப்படி அறித்து வைத்திருக்கிறர்கள். வந்து குவியும் வியாபாரக் குப்பைகளில் தரிசனம் தரும் சங்கரிகள், சுஜாதாக்கள் மூலமாகத்தான். இவர்கள்தான் தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளர் என்பது பலரது பிரேமை.

கூலிக்கு எழுதிக்குவிக்கும் இத்தகைய வியாபாரிகளால் சமூகத்துக்கோ தமிழுக்கோ, துளியும் நன்மை இல்லை.

உண்மையில் சமகாலத்து தமிழகத்தின் சிறந்தபடைப்பாளிகள் என்று பட்டியல் போட்டால் பணம் உழைக்கும் பலரும் விலாசமற்றுப் போய்விடுவார்கள். அது நாளைய இலக்கிய வரலாற்றின் வேலை. நாம் இன்று நம் கவனத்துக்கு எட்டிய படைப்பாளிகளைப் பற்றி... — பெரும்பாலும் இளைய தலைமுறைபற்றி இங்கு கவனம் திருப்புவோம்.

தஞ்சாவூர் பகுதியைச் சேர்ந்த ந. முத்துசாமி சென்னையில் அலுவல் புரிந்து வாழ்ந்து வந்த போதும், புதுமைப்பித்தனைப்போல தன் இளமைக்களமாகிய தன்னூரை அசை போடுகிற வகையில் எழுதியிருக்கிற சிறுகதைகளில் நீர்மை, வண்டி ஆகியவை தமிழின் சிறந்த கதைகள் வரிசையில் இணைக்கத்தக்கவை. தற்சமயம் 'கூத்துப் பட்டறை' என்று சென்னையில் இயங்கிவரும் அமைப்பில் பங்கு கொண்டு தமிழின் கிராமியக் கலைவடிவமான கூத்து பற்றியும்—அதில் விற்பன்னர்களான புரசை நடேசத்தம்பிரான், கண்ணப்பத் தம்பிரான் ஆகியோர் பற்றியும், பத்மா சுப்பிரமணியத்தின் பரதநாட்டியம் பற்றியும் வைகை இதழில் தொடர்ந்து எழுதி வந்தார். நாற்காலிக்காரர், சுவரொட்டிகள், ஆகிய இருவருடைய நவீன நாடகங்கள் புத்தகவடிவில் வெளிவந்ததோடு நாடகமாய் நடிக்கப்பெற்றும் பெருமை பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாப்பிரியாவின் கவிதைகளில் வாழ்க்கை அனுபவத்தில் இருந்து கிடைக்கும் உண்மைகளைவிட SENTIMENTALISM அதிகம் வெளிப்படுகிறது. இவருடைய வெள்ளம். தீர்த்த யாத்திரை, மற்றுங்கே ஆகிய கவிதைத்தொகுப்புகள் வெளி வந்துள்ளன. BANK OF TAMIL NADU என்ற வங்கியில் பணிபுரியும் இவரது இயற்பெயர் சோமசுந்தரம்.

ஸ்பிக் உர நிறுவனத்தில் பணிபுரியும் ஏ. ஏ. ஹெச் கே. கோரியின் சிறந்த சிறுகதைகள் தடுமாற்றங்கள் பதினஞ்சு' என்ற தலைப்பில் புத்தகமாக வெளிவந்துள்ளன. இவருடைய கதைகளில் வாழ்வின் உண்மையை நெகிழச் செய்யும் வாழ்வின் நிலைமைகளே வெளிப்பட்டு நிற்கின்றன. வாழ்வின் நிலைமைகளிலிருந்து வாழ்வின் உண்மைகளுக்கு இவர் நகரமுடிந்தால் நன்றாக இருக்கும். சோர்வின்றி இவர் தொடர்ந்து எழுதுவாரானால் தமிழுக்கு நல்ல சில படைப் புக்கள் கிடைக்கலாம். சிறுகதைகளோடு சில கவிதைகளும் எழுதியிருக்கிறார்.

சென்னையில் தமிழ்நாடு அரசு செய்தித்துறையில் பணி யாற்றும் பா. செயப்பிரகாசத்தின் முதல் சிறுகதைத் தொகுப்பு 'ஒரு ஜெருசலேம்'. தமிழின் மிகச் சிறந்த சிறு கதைகளை உள்ளடக்கியது. காடு, ஒரு கிராமத்து ராத்திரிகள் என்ற வேறு இரண்டு தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.

தூத்துக்குடியில் அச்சகம் வைத்து நடத்திவரும் தேவ தேவனின் 'குளித்துக் கரையேறாத கோபியர்கள்' என்ற கவிதைத்தொகுப்பு இவரை தர்மு சிவராமு, நாரணோ ஜெய ராமன் ஆகிய கவிஞர்களின் வரிசையில் நிறுத்துகிறது. பிக்ஷு மணி கைவல்யம் என்ற தனது இயற்பெயரில் சில சிறுகதை களும் எழுதியிருக்கிறார்.

'தேடல்' என்ற இலக்கியப்பத்திரிகையின் ஆசிரியரான எல். ஜோதிநாயகம் தெளிவான சிந்தனையுள்ள மார்க்ஸீய வாதி. சிவசுவின் வெளியீடுகளில் இவரது தரமான படைப்புக் கள் இடம் பெற்றிருக்கின்றன.

தாமரையில் தனது முதல் எழுத்துக்களை ஆரம்பித்த சார்வாகன் அதிகம் வெளித்தெரியாத சிறந்த யதார்த்த எழுத்தாளர். ஹரிசீனிவாசன் என்ற பெயரில் இவர் எழுதிய



கவிதைகள் சிறந்ததெனக் கருதத்தக்கவை. M. B. B. S. டாக் டரான இவர், தொழு நோய்ப்பிரிவில் சிறப்பு மருத்துவராக பணிபுரிகிறார். தத்துவச்சார்பு கொள்ளாமையால் முற் போக்கு முகாமினரோடு இவரது உறவு கசப்படைந்துள்ளது.

ஆசிரியராகப் பணியாற்றும் பொன்னீலன் வாழ்க்கையை நேரடியாகப் பார்க்கத் தெரிந்தவர் என்பதை அவரது 'கொற்'றில் 'மலர்ந்தது' என்ற குறுநாவல் தொகுப்பு எடுத்துக் காட்டுகிறது. முற்போக்கு எழுத்தாளர் என்று வெளிப்படையா கவே கூறி பெருமைப்படும் இவர், தன் எழுத்துக்கு வாழ்க்கைச் சார்பு கொண்டிருப்பதை தனது ஒவ்வொரு படைப்பிலும் புலப்படுத்துவது தனிச்சிறப்பு. இவருடைய 'கரிசல்' என்ற நாவல் ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்படுகிறது. 'உறவுகள்' என்ற இவருடைய குறுநாவல் 'பூட்டாத பூட்டுக் கள்' என்ற பெயரில் இயக்குநர் மகேந்திரனால் படமாக்கப் பட்டது.

'அஸ்வகோஷ்' என்ற பெயரில் எழுதும் ஆ. ராஜேந்திர சோழன், கதைகளில் மட்டுமல்லாது கலாசார விடயங்கள் குறித்தும் தேர்ந்த ஞானத்தை வெளிப்படுத்தியவர்களில் குறிப்பிடத்தகுந்தவர். எழுத்தைவிட செயல் முக்கியமானது வாழ்க்கை என்று சிலகாலம் எழுதாமலிருந்துவிட்டு, மீண்டும் இப்போது எழுத ஆரம்பித்திருப்பது மகிழ்ச்சியான விடயம். இவருடைய 'பறிமுதல்' என்ற தொகுப்பு வெளிவந்துள்ளது. ஆசிரியராக தொழில் புரிகிறார்.

1974-75 இரு ஆண்டுகளிலும் தமிழ்நாட்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளராக இலக்கியச் சிந்தனை அமைப்பினால் தேர்வு செய்யப்பட்டவர் வண்ணதாசன். முறையே 'தனுமை' 'ஞாபகம்' என்ற இரண்டு கதைகளும் அந்தப் பெருமையை இவருக்குத் தேடிக்கொடுத்தன. நா. பார்த்தசாரதி, வல்லிக் கண்ணன் இருவர் மீதும் அபிமானம் கொண்ட வண்ண தாசனின் சிறுகதைகள் கற்பனைவாத நிலையில் அமைந்தவை. யதார்த்தத் தளத்தின்மேல் கனவுப்படலத்தை விரித்த கலை ஞர்களில் ஒருவராக இவர் கணிக்கப்படுகிறார். 'கலைக்கப்ப டாத ஒப்பனைகள்' என்ற இவரது முதலாவது சிறு கதைத் தொகுப்பு, அதனுடைய அமைப்புக்காக இந்திய தேசிய விரு தைப் பெற்றது. 'தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள்' என்பது இவரது அடுத்ததொகுப்பு. 'கல்யாண்ஜி' என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில் கவிதைகளும் எழுதும் இவர், ஒரு சிறந்த ஓவியக் கலைஞருமாவார். பாரத ஸ்டேட் பாங்கில் பணிபுரியும் இவரது சொந்தப் பெயர் கல்யாணசுந்தரம். தாமரையில் பொறுப்பாசிரியராக இருந்த தி. க. சிவசங்கரன் இவருடைய தந்தை.

வண்ண நிலவனுடைய யதார்த்தத் தரத்திலான சிறுகதைகள்—பெரிய புத்தகக் கம்பனி, வியாபாரிகள் யாரும் பதிப்பிக்காத நிலையில் நல்ல வாசகர்கள்—நண்பர்கள் சிலரின் முயற்சியால் எஸ்தர் என்ற தலைப்பில் வெளிவந்தன. அந்தத்தொகுப்பு இலக்கியத்துறையில் பெரும் பாராட்டு பெற்றுக் கொண்டிருந்தவேளை, இவர் வயிற்றுப் பசியோடும் இருமலோடும் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தார். ருத்ரய்யாவை இயக்குநராய்க்கொண்ட 'அவள் அப்படித்தான்' படத்துக்கு வசனம் எழுதியவர்களில் இவரும் ஒருவர். தமிழ் வாழ்க்கை காதலுக்கு லாயக்கற்றது. என்ற நிலையில் மாப்பாசானின் Munt Oriol தரத்தில் தமிழின் முதல் காதல் நாவல் 'கடல் புரத்தில் நான்' ...சமீபத்தில் வெளிவந்த இவரது நாவல் 'சம்பாநதி'. வண்ண நிலவன் இப்போது துக்ளக்கில் உதவி ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

சென்னையில் கூட்டுறவுத் துறையில் பணி புரியும் பூமணி இந்தத் தலைமுறையின் மிகச் சிறந்த யதார்த்த எழுத்தாளர் என்று கணிக்கப்பெறுபவர். வயிறுகள், நீதி என்ற சிறு கதைத் தொகுதிகளும் 'பிறகு' என்ற நாவலும் வெளிவந்துள்ளன.

விவசாயியான கி. ராஜநாராயணன் தாமரையில் எழுத ஆரம்பித்தவர். 'கதவு' என்ற யதார்த்த சிறுகதையும் அதே தலைப்பிலான சிறுகதைத் தொகுப்பும் இவரை பிரதிநிதிப்படுத்துவன. கன்னிமை, வேட்டி என்ற மற்றும் இரு தொகுதிகளும் தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள் என்ற தொகுப்பும் வெளிவந்துள்ளன. 'கிடை' என்ற இவருடைய குறுநாவல் தமிழின் தலைசிறந்த படைப்புக்களில் ஒன்றாக மதிக்கப்படுகிறது. இவர் வாழுகிற கரிசல் நிலம்தான் இவரது படைப்புக்களின் களம். 'கோபல்ல கிராமம்', 'பிஞ்சுகள்' என்ற இரண்டு நாவல்கள் வெளிவந்துள்ளன. ராஜநாராயணன் ஓய்வான ரசனைக்காரர். சங்கீத ஈடுபாடும், டி. கே. சி. காருக்குறிச்சி அருணாசலம், விளாத்திகுளம் நல்லப்பா சுவாமிகள் போன்றோரோடு நேரடித் தொடர்பும் இருந்ததுண்டு.



'வேலி மீறிய கிளை' என்கிற புதுக்கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் ஜெயராமன். தமிழின் குறிப்பிடத் தகுந்த தொகுப்புகளில் இதுவும் ஒன்று. வாழ்க்கையின் உக்கிரத்தை கவித்துவப் படுத்துதல் என்பதை இவருடைய கவிதைகளின் அனுபவத்தின் ஊடாக உணரலாம்.

உமாபதியின் கவிதைகள் தொகுப்பாக வெளிவராத நிலையிலும், யாருடனும் இனம் காண முடியாத வகையானவை. நாகர் கோயில் பகுதியில் வங்கி ஒன்றில் பணி புரிகிறார். இவரது 'வெளியிலிருந்து வந்தவன்' தொகுப்பு தயாராகிறது. தேவதேவன், நாரணோ ஜெயராமன் ஆகியோரது கவிதைகளோடு பொதுத்தன்மையும் அதே நேரத்தில் தனித்துவமும் கொண்டவை தேவதச்சனின் கவிதைகள். தத்துவத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற இவர் தனது பாரம்பரிய வியாபாரமான நகைக்கடை வியாபாரத்தில் ஈடுபட்டு கோவில்பட்டியில் வாழ்ந்து வருகிறார்.

சிறந்த தமிழ் எழுத்தாளர் வரிசையில் இடம் பெறும் நீல. பத்மநாபன் கேரள மின்சார வாரியத்தில் எஞ்சினியர். இவரது 'தலைமுறைகள்' என்ற முதல் நாவல் தமிழின் சிறந்த யதார்த்த நாவல்களில் ஒன்று. பள்ளிகொண்டபுரம், மின் உலகம், உறவுகள், உதயதாரகை என்பன இவரது பிற நாவல்கள்.

விஜயலட்சுமி என்ற பெயரில் பதிப்பகம் நடத்தி இலக்கியப் பணியாற்றி வரும் சிவசுவின் இயற்பெயர் நா. சிவசுப்பிரமணியம். பல சிறுகதை கவிதை தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். தமிழில் எம். ஏ. பட்டதாரியான இவர் வெகுஜன வாசகர்களின் ரசனை பற்றி டாக்டர் பட்டத்துக்கு ஆராய்ச்சி செய்து வருகிறார்.

கணையாழியில் 'முகம்மது கதைகள்' என்ற கதைத் தொடர் எழுதிய காசிபன் திருவனந்த புரத்தைச் சேர்ந்தவர். இவரது 'அசடு', 'கிரகங்கள்' என்ற இரு நாவல்கள் வெளி வந்துள்ளன.

தமிழக இலக்கியத்துறையை வளப்படுத்தி அலங்கரிக்கும் சில பூக்கள் பற்றிய தகவல்களைத் தந்துள்ளேன். இவை மட்டுமே முழுதான பூங்கா அல்ல. வேறும் பல பூக்கள் பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் எழுதும் எண்ணம் உள்ளது.

சுடர் யூன் 1981



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் – உணர்ச்சிகள்

உடலைத் தொடும்போது உண்டாவது ஸ்பரிச சுகம் எனப்படும். இருபக்க மனமும் ஒன்றுபடும்போது அது தேனாக இனிக்கும். ஓர் ஆண் ஒரு பெண்ணையோ அல்லது ஆணையோ ஸ்பரித்து சுகம் காணலாம். அது மனதைப் பொறுத்தது. ஆனால் மற்றவர்கள் விரும்பாதபோது அவர்களை ஸ்பரித்து சுகம்காண முடியுமா? இந்த 'ஒன்சைட்' ஸ்பரிசம் எவ்வளவுக்கு சுகம் அளிக்கும்.

தினமும் பயணம் செய்து கொழும்பு பஸ்களில் நடக்கும் குஸ்தி பழக்கமாவிட்டவர்களுக்கு இந்த உரசல் ஒரு பொருட்டே அல்ல. கிராமப் புறங்களில் ஆணுக்கு அருகாக அமர்வதற்கே விரும்பாமல் எழுந்து நிற்கும் பெண்களை நான் கண்டிருக்கிறேன். அந்த ஆண்களும் அப்படியே! அவர்கள் நரகத்துக்கு வரும்போது பஸ்களில் பெரும் மோதல்கள் - உரசல்கள் புதிய அனுபவம். சுகானுபவமாகவே அவர்களை உருக வைத்துவிடும். அவன் உரசி சுகம் காணும் நகரத்துப் பெண்ணுக்கு இது சர்வசாதாரணம்! அவனுக்கு?

கொழும்பில் தினசரி பிரயாணம் செய்யும் யுவதிகள் தம்மோடு ஒரு குடையையும் துணைக்கு எடுத்துச்செல்ல தவறமாட்டார்கள். தம் பின்னால் யாராவது வாலிபர்கள் நின்று 'குரங்குச் சேட்டை' செய்தால் (குரங்குகள் மன்னிக்க) குடைக்கம்பு அவர்களின் இரக்கமற்ற இதயத்தைப் பிளக்க முயற்சிப்பது போல் நெஞ்சில் இடிக்கும். நல்ல பாதுகாப்பு!

பேராதனை பஸ்சில் தொழிற்சாலைக்குச் செல்லும் ஒரு பெண்ணை நான் தினமும் காண்பேன். எப்போதும் நாலைந்து தடியர்கள் அரைத்துக்கொண்டிருக்க மூச்சுவிட சிரமப்பட்டவாறு பயணம் செய்வாள். செத்துவிடுவாளோ என்று கூட நான் நினைப்பேன். அவர்களுக்கு அது இன்பத்தை அளிக்குமோ என்னவோ. அவளுக்கு அது நரகவேதனை. தொழிற்சாலையில் நாள் முழுவதும் கஷ்டப்பட்டு உழைக்கும் அவள் போகும் வழியிலும் இத்தனை கஷ்டமா?

'மதகுருமாருக்கு மட்டும் என்று எழுதப்பட்டிருக்கும் சீட்டில் அமர்ந்திருப்பவர்கள் மதகுருமார் வந்ததும் எழுந்து இடம் கொடுத்து விடுவார்கள். ஆனால், 'பெண்களுக்கு மட்டும்' என்று எழுதப்பட்டிருக்கும் சீட்டில் ஆண்கள் சுகமாக அமர்ந்திருப்பார்கள். தாயொருத்தி பிள்ளையைச் சுமந்தபடி சிரமத்துடன் நிற்க 'பெண்களுக்கு மட்டும்' சீற்றில் ஒரு மொட்



டை வாலிபர் அமர்ந்துகொண்டு ஸ்டைலாக சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார். அதன் புகை 'புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது' என்ற அறிவிப்பைத் தழுவிச் சென்றது. அதே வாலிபர் மினி மங்கை ஒருத்தி வந்தபோது எழுந்து இடம் கொடுத்தது தனியான கதை!

பஸ்சுக்குள் கால் வைத்ததும் உரசலின்பம் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று தேடும் வாலிபர்களும் இருக்கிறார்கள். அதேபோன்று அதனை விரும்பும் பெண்களும் இருக்கலாம். ஆனால் அது சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல. சுற்றியிருக்கும் பிரயாணிகளுக்கும் எவ்வளவு அவஸ்தை. 'புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது' என்பது போல் இதற்கும் ஓர் அறிவிப்பு எழுதினால் என்ன? 'உரசல் தடை செய்யப்பட்டுள்ளது'

சுதம்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய உலகம்

## ● முல்லை மணி

முல்லை மணியை ரயிலில் கண்டபோது பண்டாரவன்னியன்தான் ஞாபகத்துக்கு வந்தான். பண்டாரவன்னியன் வரலாற்று நாடகத்தை எழுதி வெளியிட்ட முல்லை மணியை இலக்கிய உலகம் மறக்கமுடியுமா? முல்லை மணி வே. சுப்பிரமணியம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக பணிபுரிகிறார். பயணக் களைப்பையும் பாராமல் அவர் நகைச்சுவையுடன் ஈழத்து இலக்கிய நிலைவரங்களைப் பற்றி உரையாடினார். பல சிறுகதைகளை எழுதியுள்ள முல்லை மணியின் தொகுப்பு, 'அரசிகள் அழுவதில்லை' தான் தோன்றீஸ்வரர், வில்வையடி பிள்ளையார் மீது பாமாலைகள் பாடியிருக்கிறார். வீரகேசரி நாவல் போட்டியில் அவரது 'மல்லிகை வனம்' பரிசு பெற்றது. முல்லை இலக்கிய வட்டத்தின் தலைவராகப் பணியாற்றிவரும் இவர் தனது மண்ணின்மீது அளவற்ற பாசம் கொண்டவர்.

## ● தேவன் மாஸ்டர்

திருநெல்வேலி சந்தியில் சைக்கிளில் திரும்பியபோது அந்த எலும்புக் கூட்டைக் கண்டதும் நெஞ்சம் துணுக்குற்றது. ''மாஸ்டர் இது என்ன கோலம்?'' என்கிறேன் வேதனையோடு. ''சாப்பாடு உடம்பில் ஒட்டுவதில்லை' என்கிறார். யாழ்ப்பாணத்தில் எந்தப் பொது நிகழ்ச்சி என்றாலும் கணீர் என்று ஒலிக்கும் ஓர் அறிவிப்பாளரின் குரல் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும், இனங்காணத்தக்க குரலுக்குரிய தேவன் மாஸ்டர் அவரது தலைமையைக் காணவே பட்டி மன்றத்துக்குச் சனம் கூடுமே அந்தத் தேவன்- வழக்காடு மன்றத்தில் நீதிபதியாக 'சபாஷ்' பெறும் தேவன் மாஸ்டர் உருக்குலைந்த தோற்றத்தில்... சமூகத்தின் பொதுச் சொத்தான மாஸ்டர் தன்னைக் கவனியாமல் விட்ட அவருக்கு மட்டுமல்ல, எமக்கும் நஷ்டம் இழப்பு- இது ஒரு பாடம். பொது வாழ்வில் உள்ளவர்கள் தம்மைப் பாதுகாப்பதிலும் அக்கறை செலுத்த வேண்டும்.

## ● சக்தீ பாலையா

'தீ' போன்ற பல கவிதைகள் தந்தவர் சக்தி பாலையா, சிறந்த அந்தக் கவிஞர் புறக்கோட்டையில் ஒரு விபத்தில் சிக்கி, கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இலக்கியத்தை நேசிக்கும் நண்பர்கள் போய்ப் பார்ப்பது அவருக்கு ஆத்மபலத்தைக் கூட்டும். இலக்கிய உலகம் கவிஞர் நலமடைய நல்லாசி கூறுகிறது.

## ● சுதந்திரமாக

ஈழத்தில் எழுதுபவர்கள் தம் இச்சைப்படி சுதந்திரமாக எழுதுவதில்லை. விமர்சகர்களால் பாராட்டப்பட வேண்டும் என்ற ஒரு மாயையான நினைப்பை அல்லது முன்னவர்கள் எழுதியது போலவே எழுதினால்தான் பாராட்டப்படும் என்ற நினைப்புடன் ஒரு சில எல்லைக்குள் தம்மை வரையறுத்து எழுதுகிறார்கள். தமிழ்நாட்டில் அவ்வாறு இல்லாததால், தரமோ இல்லையோ புதிய எல்லைகளைத் தொடுகிறார்கள், புதுமையாக இருக்கிறது. வாசகர்கள் வரவேற்கிறார்கள் ஆனால், எம்மவர்களின் ஆக்கங்களைப் பார்த்தால், திரும்பத் திரும்ப சீதனம், சாதி என்று அரைத்த மாவையே அரைக்கிறார்கள். தரமாக எதையும் எழுதலாம் என்ற நிலை வேண்டும்; நினைப்பு வேண்டும் என்கிறார் நமது நாட்டுப் பழம்பெரும் பெண் எழுத்தாளர் ஒருவர். அவர் கூறியது சரியா தவறா? உங்கள் சிந்தனைக்கு...

## ● கதிரின் நினைவு

மிகச் சிறந்த எழுத்தாளராக இனங் காணப்பட்ட எஸ். கதிர்காமநாதன் இளம் வயதிலேயே காலமானது நமது துரதிர்ஷ்டம். அற்புதமான அந்தப் படைப்பாளி இன்றிருந்தால் என்று நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நோகிறது. ஈழத்து இலக்கியத்தை நினைக்கும்போதெல்லாம் அந்தக் கலைஞனின் நினைவு எழுகிறதைத் தவிர்க்க முடியவில்லை. கதிரின் சில சிறுகதைகள் காலத்தால் அழியாதவை. அவரது நினைவு காலத்தை வென்றது.

(தினகரன் மே. 1981)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதம் விதமான குழந்தைகள் வகை வகையான ஆசைகள்!

கடந்த ஆண்டினைச் சிறுவர் ஆண்டாகக் கொண்டாடி மகிழ்ந்தோம். அவர்களைப் பற்றிய அக்கறை முற்றுப் பெற்று விட்டதா? அல்ல!

குழந்தைகள் எந்தக் காலத்திலும் பேணிப் பாதுகாக்கப் பட வேண்டியவர்கள். அவர்களின் உள்ளங்களில்தான் எத்தனை ஆசைகள்! அவரவர் சூழலுக்கும் மனப்பாங்குக்கும் ஏற்ப அவை மாறுபடுகின்றன.

"குழந்தாய்! கடவுள் உன் முன் தோன்றினால், நீ என்ன வரம் கேட்பாய்?"

இப்படி ஒரு கேள்வியை நமது குழந்தைகளிடம் கேட்டால் அவர்கள் என்ன பதில் சொல்வார்கள்? கேட்டோம். கிடைத்த பதில்கள் மிகவும் சுவாரஸ்யமானவை.

அவற்றினை நமது 'மித்திரன்' வாரமலர் வாசகர்களுக்குத் தொகுத்துத் தருகின்றார், காவலூர் எஸ். ஜெகநாதன்.

இதோ படித்துப் பாருங்கள்!

நம் நாட்டின் பல பாகங்களிலும் காண்கின்ற பலதரப்பட்ட வாழ்க்கைத் தரத்திலும் உள்ள குழந்தைகளைக் கண்டு அவர்களின் மனப்பாங்கைத் தரிசிப்பது எனது பயணத்தின் நோக்கம். நம் நாட்டுக் குழந்தைகள் மீது ஒரு படப்பிடிப்பு இது. ஒரு சோறு பதமென்பார்களல்லவா? வாருங்களேன்......

வெள்ளவத்தையில் ஒரு பின்தங்கிய குடியிருப்புப் பகுதி. உழைக்கும் தொழிலாளர்களே பெரும்பாலானவர்கள். மாலை நேரம், அலங்காரமும் அலங்கோலமுமான பல சிறுவர்கள் நின்று விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள். என்ன விளையாட்டு என்று ஒரு இலக்கு இல்லாத விளையாட்டு!

கே. விஜயன் தனது மகனைப் பிடித்து இழுத்து வருகிறார். பெயர் துரானி. வீட்டில் ராஜா என்று அழைக்கிறார்கள். அறிமுகமற்றவர்கள் என்று துளியும் பயமின்றி முன்னால் நிற்கும் துரானிக்கு எட்டு வயது. இசுபத்தன கனிஷ்ட வித்தியாலயத்தில் பாலர் வகுப்பில் படிக்கிறான். நான் கேட்கிறேன் அல்லா உங்க முன்னாலே வந்து என்ன வேணுமென்றாலும் கேள், தருகிறேன் என்று கேட்டால், நீங்க என்ன கேட்பீங்க?

சட்டென்று துரானி கூறுகிறான்; 'கார்!' என்று, யார் ஓட்டுவது...? நான் தான் என்று கம்பீரமாகக் கூறுகிறான். "யார் யாரை ஏற்றிக் கொண்டு போவீங்க...? வாப்பாவையும் உம்மாவையும்! என்கின்ற துரானி பக்கத்து வீட்டுச் சிறுவர்கள் யாரையும் ஏற்றிக்கொண்டு போகமாட்டானாம். அவர்கள் தனக்கு அடிப்பது தானாம் காரணம் என்கிறான்.

அப்போதே கார் கிடைத்து விட்டது போன்ற பூரிப்பில் இருக்கும் துரானியைப் பிரிந்து யாழ்ப்பாணம் போவோம். தீவுப்பகுதியிலுள்ள ஒரு கிராமம் கரம்பன். இராமநாதன் தம்பதிகளின் மகன் நரேந்திரனுக்கு வயது ஏழு.

முதலாம் வகுப்பு படிக்கிறான். கடவுள் உங்க முன்னாலே வந்து என்ன வரம் வேண்டுமென்று கேட்டால் என்ன கேட்பீங்க... என்று கேட்கிறேன். வரம் என்றால் என்ன என்று தாய் விளக்குகின்றார். 'படிப்பு' என்று பளிச்சென்று பதில் கூறுகிறான்.

'படிப்புத்தான் வேணுமா? கடவுளட்ட அதைத்தான் கேட்பீங்களா? மீண்டும் வினவுகிறேன். கோயிலுக்குப் போனா அம்மா அதைத்தான் கேக்கச் சொல்லுவா என்றுவிட்டு தாயைப் பார்க்கிறான் நரேந்திரன். வேறு பலவும் கடவுளிடம் கேட்க ஆசை. தாய் முன்னால் நிற்பது தடை, உங்களுக்கு மட்டும் படிப்பு கேட்பீங்களா எல்லாருக்கும் கேட்பீங்களா..? எல்லாருக்கும் பூரணி, ஜனார்த்தனன்...' இப்படி பல பெயர்களை அடுக்கிக்கொண்டே போகிறான் நரேந்திரன்.

பூரணி வேறு யாருமல்ல அவனுடைய சகோதரிதான். இரட்டைப் பிள்ளைகள். அவன் அழுதால் இவளும் அழுவாள். அவன் சிரிக்கும்போது இவளிடமும் சிரிப்பு. இவளின் ஆசைகளும் அவனுடையது போன்றுதானோ அதே கேள்வியை கேட்டேன்.

சில நிமிட மௌனத்தில் ஆழ்ந்த சிந்தனை... நீங்க என்ன கேப்பீங்க... 'காப்பு சங்கிலி' பூராணிக்கு நகைகள் தான் வேண்டுமாம், தனக்கு மட்டும்தான் கேட்பாளாம். படிப்பைக் கேட்கமாட்டீங்களா? என்று கேட்கிறேன். 'எனக்கும் சேர்த்துத்தான் அண்ணன் கேட்டிட்டாரே!' என்று பட்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டென்று கூறிவிட்டு, என்னை வென்ற சிரிப்புச் சிரிக்கிறுள் கெட்டிக்காரி.

மலையகம் போவோமா?

வாரியப்பொலை தோட்டத்தில் இராமச்சந்திரன் தம்பதிகளின் புதல்வி கலைநாயகி. சங்கமித்த மகளிர் வித்தியாலயத்தின் தமிழ்ப் பிரிவில் படிக்கும் கலைநாயகிக்கு வயது பத்து. கடவுள் வந்து விட்டார், எது கேட்டாலும் தருவார். அவளது ஆசையைப் பாருங்கள். பெரிய வீடு, கார், ரெலிவிசன் அடுக்கிக் கொண்டே போகிறுள். அவளது ஆசைக்குக் காரணம் இதுதான். பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவிகளில் சிலர் மிகவும் வசதி படைத்தவர்கள், காரில்தான் பள்ளிக்கூடம் வருவார்கள். ரவுண் பள்ளிக்கூடமல்லவா? கலைநாயகி நடந்து போகிறுள். கூடப்படிக்கும் வசதிபடைத்த பிள்ளைகளின் வீட்டு வர்ணனைகளைக் கேட்டு அவளுக்கு ஒரே ஆசை அத்தகைய வாழ்க்கையில்...

கொழும்பில் உள்ள ஒரு முஸ்லிம் நண்பரின் வீடு. அப்துல் சுபான் அவரது பெயர் கீழ்மட்ட மத்தியதரக் குடும்பம். மகள் சுலைகா பீபியை அழைக்கிறுர். அல்லா வந்த விவகாரத்தையும் வரம் தரப்போவதையும் அவரே விளக்குகிறுர். மிகவும் பயந்த சுபாவமுடைய பீபி முகத்தில் பயக்களை படர எப்போதடா விடுபடுவோம் என்பதுபோல் நிற்கிறுள். பல நிமிடங்கள் மௌனத்தில் கரைந்து எமது பொறுமையைச் சோதிக்கிறது. மலர் இதழ்கள் அவிழ்கின்றன. 'நல்ல உடுப்புகள் வேணும்' உங்களுக்கு மட்டும்தான் கேட்பீங்களா? சம்மதம் என்று தலையாட்டுகிறுள். அதுகூட விடுபடும் அவசரம் சுலைகா பீபிக்கு, நல்ல உடுப்புகள் தேவைதான், அழுக்கான உடை அணிந்திருந்தாள். அப்துல் சுபான்தான் என்ன செய்வார்? வருமானம் அப்படி! பீபியின் மனதில் உடுப்பு இல்லாத குறைதான் பாரமாக இருக்கிறது!

யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத் தெருவிலுள்ள ஜூடே ரெறுன்ஸ் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் படிக்கிறுன். வயது ஏழுதான், துடியான சுபாவம், எப்போதும் சிரித்த முகம். கடவுள் வந்து உங்களட்ட என்ன வேணும் என்று கேட்கிறுர், எது கேட்டாலும் தருவார், நீங்க என்ன கேட்பீங்க என்று நான் கேட்டு முடிக்கவில்லை. 'பந்து' என்கிறுன் ரெறுன்ஸ். கால்பந்து 'மாட்ச்' சுகள் நடக்கும் சீசன் அல்லவா? அவனுக்கு அதில்தான் ஆசை. பந்து விளையாடப் போறீங்களா சரி உங்களுக்கு மட்டும் கேட்பீங்களா உங்க ப்ரெண்ட்ஸ் எல்லாருக்கும் கேட்பீங்களா? தனிய விளையாட ஏலுமா எல்லாருந்தானே விளையாடுவம்' என்று கூறி என்னையே அசடுவழியப் பண்ணிவிட்டான். விளையாட்டில்தான் அவனுக்கு அளவுகடந்த ஆர்வம் என்கிறுர் தாய். நாளை ரெறுன்ஸ் ஒரு விளையாட்டு வீரனுக வருவானே?



மாத்தளை பாக்கிய வித்தியாலயத்தில் பயிலும் முனியாண்டி லட்சுமி பதினெரு வயது. மாத்தளையில் நடந்த சிறுவர் ஆண்டு விழாவில் நடிப்பு, பேச்சு என்று பல பரிசுகள் பெற்றவள். செயற்திறனும் புத்தி கூர்மையும் மிக்கவள் என்று பார்த்ததும் தெரிந்தது. அவளிடம் கேட்டேன் கடவுள் வந்து என்ன வரம் வேணும் என்று கேட்டால் என்ன கேட்பீங்க?

'என்ன கேட்டாலும் தருவாரா? என்று என்னையே திருப்பிக் கேட்கிறுள் லட்சுமி. 'ஆமாம், எது கேட்டாலும் தருவார்.

'நான் நல்லாப்படிச்சு உத்தியோகத்திலை சேர வேணும், வீட்டுக்கு உழைச்சுக் குடுக்க வேணும்' அடுக்கிக்கொண்டே போகிறுள்.

முனியாண்டி சிறிய சாப்பாட்டுக் கடை வைத்திருக்கிறுர். ஏழ்மை வீட்டிலே... அதனுல் லட்சுமியின் மனதில் காசு உழைக்கும் ஆர்வம் இப்போதே! அதுவும் வீட்டுக்கு உழைக்கும் ஆர்வம்!

கடவுளிடம் லட்சுமி அதைக் கேட்க, அதே மாத்தளையில் ராஜா வீதியில் வசிக்கும் வீரபுத்திரனின் மகள் ரமணி என்ன கேட்கிறுள் தெரியுமா? ரமணிக்குப் பத்து வயது, ஆனுல், பெரிய மனிசி போன்ற பாவனை புனித தோமையர் மகளிர் கல்லூரியில் படிக்கிறுள். நான் கேள்வியைக் கேட்டுவிட்டு பதிலுக்காக காத்திருக்கிறேன். சில நிமிடங்களின் பின் அவள் என்னிடம் கேட்கிறுள், 'கடவுள் இங்கு வருவாரா நாமதானே கோயிலுக்குப் போகவேணும்?

'வந்திட்டார் என்று வைத்துக் கொள்வோம்; நீங்கள் எது கேட்டாலும் தருவார், என்ன கேட்பீங்க? ரமணியும் சில நிமிட மௌனம், அதை உடைத்துக் கொண்டு அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்கிறுள்; 'ஸ்டார்' என்றுவிட்டு கெஞ்சுவதுபோல் பார்க்கிருள். புரியாமல் வீரபுத்திரனைப் பார்க்கிறேன் நான். வாஞெலியில் வரும் சொக்கலேட் விளம்பரம் அவளது மனதில் பதிந்துவிட்டது என்கிருர் அவர். ஆசையைப் பார்த்தீர்களா?

சூழல், வாழ்க்கைத்தரம் இவையெல்லாம் சிறுவர்களின் மனங்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. விதம் விதமான அந்தக் குழந்தைகள் மனதின், ஆசைகள்தான் எத்தனை வகை. அந்த மனங்களோடு உறவாடுவதே புதிய சுவை!

— மித்திரன் வாரமலர் 13 ஜனவரி 1980



# புதியவார்ப்பு

ஈழத்துப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் படிப்பவர்களின் கண்களில் அடிக்கடி காணப்படும் பெயர் காவலூர் எஸ். ஜெகநாதன் என்பதாகும். கடந்த மூன்ருண்டு காலத்தில் இயந்திர வேகத்தில் எழுதிக் குவித்தவர் இந்தக் காவலூரான். மூன்ருண்டு காலத்தில் இருநூறுக்கு மேற்பட்ட சிருஷ்டிகளைப் படைத்துவிட்ட இவரை வெறி கொண்ட எழுத்தாளர் என்றேதான் வர்ணிக்க வேண்டும்.

கதை, கவிதை, கட்டுரை ஏன் விமர்சனம் இப்படி பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டு எழுதிவரும் ஜெகநாதன் பத்து சிறுகதைப் போட்டிகளில் முதற் பரிசு பெற்றுள்ளார். நான்கு சிறுகதைப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை முதற் பரிசாக சுவீகரித்துள்ளார். அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட பதினுறு சிறுகதைப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களை பெற்று நண்பர்களால் 'பரிசு எழுத்தாளர்' என்று அன்பாக அழைக்கப்படுகின்ருர்.

இலக்கிய உலகில் 1976-ம் ஆண்டு பிரவேசம் செய்த 'சொந்தங்கள் தொடர்கின்றன' என்ற சிறுகதை தொகுதியையும், 'கலட்டுத்தரை' என்ற குறுநாவலையும், இரண்டு எழுத்தாளர்களுடன் கூட்டுச்சேர்ந்து ''காலநதி'' என்ற நூலையும் வெளியிட்டுள்ளார்.

கண்டியில் கன்னொருவையிலுள்ள விவசாய திணைக்களத்தில் தாவர நோய்ப் பகுதியில் ஆராய்ச்சி உதவியாளராக பணியாற்றும் காவலூர் ஜெகநாதன், தனது இலக்கிய சகாக்களை கண்டுவிட்டால் போதும், பல மணி நேரம் சுவாரஸ்யமாக உரையாடுவார். எழுதினுல் மட்டும் போதாது எழுத்தில் இருக்கும் சத்தியம் அவர்கள் வாழ்க்கையிலும் இருக்க வேண்டும் எனக் கூறும் இவர், சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் எழுத்தாளர்களின் போலித்தனங்களை சாடுவதில் வல்லவர். எழுத்துலகில் தேனீயைப்போல சுறுசுறுப்பாக இயங்கும் இவர் இன்னும் பல படைப்புகளை படைக்க வேண்டும்.

— அந்தனி ஜீவா

தினகரன் — 16 ஆகஸ்ட் 1979



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சிறுகதைகளில் பிரதேசப் பிரதிபலிப்பு

இயற்கையின் ரசிப்பு கலைஞர்களிடம் அதிகம். இயற்கை ஐம்புலன்களினூலும் அவன் உள்வாங்கும் சுற்றுச்சூழல். அதை வியக்கிறான், நயக்கிறான் கவிதை பிறக்கிறது. நிலவையும் வானத்தையும் பாடினான். அவ்வளவுதானா இயற்கை? மண்.......... அதைவிட மேலான மண்ணின் மைந்தர்கள். அவற்றினை விலக்கிய இலக்கியம் அரிது. பயிர்கள் மண்ணிலே முளைகொள்வது போல் இலக்கியமும் மண்ணிலே முளைகொண்டு நிலைபெறுகிறது. அக்காலம்தொட்டு இன்றுவரையான இலக்கியங்கள் தான் முளைகொண்ட மண்ணை - அதன் மக்களை மறக்காததை ஊன்றிக் கவனித்து அறியலாம்.

நவீன இலக்கிய வடிவங்களில் ஒன்றான நாவலில் பிரதேச நாவல்கள் என்று சிறப்பாகக் குறிப்பிடும் அளவுக்கு முனைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாவல் தான் எழுந்த களத்தின் பிரதேசத்தைப் பிரதிபலிப்பதில் நிறைவு பெறும்போது அது பிரதேச நாவல்கள் என்ற வகையைச் சேர்கிறது.

சிறுகதை கடினமான இலக்கிய வடிவம். என்றாலும் பிரசுர வசதி தொடக்க முயற்சிக்கான வாய்ப்பு - ஆரம்ப எழுத்தாளர்களை பெரும்பாலும் சிறுகதைகளையே எழுதத் தூண்டுகிறது. ஈழத்தின் பலவேறு பகுதிகளிலிருந்தும் துடிப்பான ஆர்வத்துடன் இளைஞர்கள் எழுத முனைகிறார்கள். அவர்களிலும் பெரும்பாலானோர் வெறும் முக்கோணக் காதல் கதைகள் செயற்கையான கண்ணீர் வடிப்புகள் என்றில்லாமல் தமது மண்ணை அந்த மண்ணின் மக்களை சித்தரிக்க முனைகிறார்கள்.

பயனாக ஈழத்துச் சிறுகதைகளில் பிரதேசப் பிரதிபலிப்பு சிறப்பாக வெளிப்படுகின்றது. ஒரு சிறுகதையிலேயே பிரதேசத்தை முழுமையாக தரிசிக்க முடியாது. ஆனால் பிரதேசத்தின் உயிர்த்துடிப்புக்களை வெளிப்படுத்த முடியும்:

சிறுகதையில் மண்ணைச் சித்தரிப்பதன் வெற்றிக்கு உதாரணமாக திரு. முத்துலிங்கத்தின் 'கோடை மழை' என்ற சிறுகதையை எடுத்துக் கூறலாம். கொக்குவில் கிராமத்தினை அப்படியே கண்முன் நிறுத்துகிறது அந்தக் கதை. கிராமத்தின் ஒழுங்கைகளும் ஆடு படலையும் மட்டுமன்றி, அப்பகுதி மக்களின் மனப்பாங்கும் அற்புதமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.



பரவலாக பெயர் கூட அறியப்படாத கிராமங்களில் இருந்தெல்லாம் புதிதுபுதிதாக இளைஞர்கள் எழுதுகிறார்கள். அதுவும் தாம் - தமது மக்கள் முகம் கொடுக்கும் வாழ்வுப் பிரச்சினைகளை - தமது மண்ணின் படைப்பாக்குகிறார்கள். அவ்வப்பகுதி மக்களின் பேச்சு வழக்குகளையே கையாண்டு இயல்பான படைப்புகளால் ஈழத்து சிறுகதைத் துறையை செழுமைப்படுத்துகிறார்கள்.

புதிய புதிய பிரதேசங்கள் இலக்கியத்தின் வழி அதிகமாகும்போது மக்கள் ஐக்கியப்படுகிறார்கள். மனங்களும் வாழ்வின வீச்சும் விரிவடைகிறது. தான் தவழ்ந்து விளையாடிய நடந்து உறவாடிய் வாழ்ந்து போராடிய மண்ணை எழுத்தாளன் படைக்கும்போது நேர்மை விளைகிறது; படைப்பில் சுத்தம் தெரிகிறது. அது வெற்றி பெறுவதில ஏது ஐயம்? மண்ணில் வேர் கொண்ட படைப்பு என்றும் மடிவதில்லை.

மண்ணின் மணம் வீசும் சிறுகதைகள் ஈழத்தில் நிறையவே வெளிவருகிறது எதிர்கால வளத்துக்கு நல்ல அறிகுறி. புதிய படைப்பாளிகள் பிரதேசப் பிரதிபலிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பது மட்டுமே போதும் என்று அர்த்தமாகாது.

— வானொலி - கலைக்கோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டோம் கருத்தறிந்தோம்!

[1976க்குப்பின் கையிலெடுக்கும் ஈழத்து பத்திரிகை சஞ்சிகைகளில் எல்லாம் காலூர் எஸ். ஜெகநாதனின் ஆக்கங்களை அடிக்கடி அவதானித்தேன். அவ் இலக்கியப் படைப்புகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறேன். தமிழ் இலக்கியப் பரப்பிலே இப்பெயர் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் அளப்பரியது. குறுகிய காலத்தில் நிறைய எழுதி சாதனையை நிலைநாட்டியவரும், இக் காலப்பகுதியில் நடைபெற்ற பெரும்பாலான இலக்கியப் போட்டிகளில் தங்கப்பதக்கங்களையும், முதற்பரிசுகளையும் பெற்றுக்கொண்டு அதே வேகத்துடன் எழுதி வருபவருமான ஜெகநாதனை சந்திக்கவேண்டுமென்பது எனது நெடுநாளைய அவாவாக இருந்தது. கடந்த மூன்று ஆண்டுகளில் நூற்றி ஐம்பதுக்கும் அதிகமான சிறுகதைகளையும், உருவகக் கதைகளையும்' அநேக இலக்கிய விமர்சனக் கட்டுரைகளையும் பல மரபு, புதுக்கவிதைகளையும் எழுதியுள்ளார். கலட்டுத்தரை, சொந்தங்கள் தொடர்கின்றன, காலநதி என்பன வெளிவந்த இவரது நூல்களாகும். இருபது சிறுகதைகளைக் கொண்ட 'வானத்து நிலவு' தொகுப்பு அண்மையில் வெளிவந்துள்ளது. இவர் பேராதனை மத்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் தாவர நோய்ப் பகுதியில் கடமையாற்றுகிறார்.]

**கேள்வி :** இலக்கியத்தின் மூலம் சமூகப் பிரச்னைகளுக்கு தீர்வு என்பதைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

**பதில் :** ஓர் இனத்திற்கோ சமூகத்திற்கோ அல்லது தனி மனிதனுக்கோ எந்தக் காரணியினாலும் பாதிப்பு ஏற்படும்போது அந்தப்பிரச்சினையிலிருந்து அவர்களை விடுவிக்க ஒரு தீர்வையோ அல்லது தீர்வை நாடியோ படைப்புகளை உருவாக்காமல் பிரச்சினையை மட்டும் வெளிப்படுத்தினால் போதும் என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. சமூகப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண எழுத்தாளன் சிந்திக்கவில்லையானால்—ஒரு படைப்பிலே சிந்தனையின் பங்கு தாழ்ந்து விடுமானால், அதை அரை குறையாகவே கருதுகிறேன், என்கின்ற போது, அந்த தீர்வுகள் வெளிப்படையாகவோ செயற்கைத் தன்மையுடையதாகவோ இருக்கக்கூடாது என்பதைக் கவனிக்கவேண்டும்.

**கேள்வி :** காலமாற்றத்திலே இலக்கியப் போக்குகளில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள் பற்றிய உங்கள் கணிப்பு என்ன?

**பதில் :** சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட பெரும்பாலான கதைகளில் பிரசார வேகத்தையும், கலைப் பண்புக் குறைவையும்—பெண் என்றால் ஒரு எலும்புக்கூட்டை வரைந்து பெண் என்று எழுதுவது போல—வெறும் சித்தாந்த கோஷங்களாகவும் இருந்தன. இந்தக் குறைபாடுகளை சமகால இயக்குநர்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளார்கள். இதன் சுக விளைவுகள் எதிர்காலத்திற்றான் துலங்கும்.

**கேள்வி :** சிறுகதைத் துறையிலே வேகமாகவும், தரமாகவும் பணியாற்றி வரும் நீங்கள் நாவல், கவிதை போன்ற துறைகளிலே தீவிரப்படும் எண்ணம் இல்லையா?

**பதில் :** 76 இல் எழுதத் தொடங்கிய பின் 2 நாவல்கள் எழுதியிருக்கிறேன். விரைவில் வாசகர்களுக்கு எட்டும். இவை தவிர 'எரிமலைகள் குமுறுகின்றன,' தங்கப்பதக்கத்தையும், 'அவர்கள் நிமிர்ந்து விட்டார்கள்,' பேராதனை வளாக தமிழ்ச் சங்கத்திடம் பரிசும் பெற்றிருக்கின்றன. இவை குறுநாவல்களாகும். மரபுக்கவிதைகளை வேகமாக எழுதிவருகிறேன். அடிக்கடி பத்திரிகைகளில் அவதானிக்கவில்லையா?

**கேள்வி :** புதுக் கவிதைகளைப்பற்றி

**பதில் :** புதுமைகள் நிச்சயமாக வரவேற்கப்பட வேண்டியவைதான். மெய்சிலிர்க்கவைக்கும் சில படைப்புகளும் தோன்றாமலில்லை. ஆனால் மேமன் கவி போன்றவர்கள் சூனியம், ஒலி மின்னல், ஏப்பம்......இப்படி ஐந்தாறு வார்த்தைகளை வைத்துக் கொண்டு வசனங்களை அடுக்கி புரியாத கவிதைப் பாசாங்கு செய்ய முற்படுகிறார்கள். பயிரைவிட களைகள் அதிகரிப்பது போற் தெரிகிறது. நல்ல வளர்ச்சிக்குகந்ததல்ல.

**கேள்வி :** மலையகத்தில் வாழ்கின்ற நீங்கள் மலையக மக்களின் பிரச்சினைகளில் உங்கள் பார்வையை, சிந்தனைகளை விரித்ததுண்டா? மலையக மறுமலர்ச்சியில் இலக்கியத்தின் பங்குபற்றி உங்கள் கருத்தென்ன?

**பதில் :** மலையக மக்களின் பிரச்சினைகளைக் கருவாகக்கொண்டு பல சிறுகதைகளை எழுதியுள்ளேன். ஆனால் தோட்ட மக்களுடன் கூடி வாழாததாலோ, என்னவோ நம்பகத்தன்மை அற்றதாக குறைப்பிரசவங்களாகிவிட்டன. மலையக மக்களுடன் வாழ்ந்து அவர்களின் பிரச்சினைகளை நன்குணர்ந்த மானிட நேசிப்புள்ள இலக்கிய வாதிகள். ஆத்ம சுத்தியுள்ள இலக்கிய வாதிகள் தோன்றி அச்சமூகத்தை நெறிப்படுத்த வேண்டும். மலையகத்தின் அவசர அவசிய தேவை இது. மலையக மறுமலர்ச்சிக்கு இலக்கியத்தின் பங்கு மிக முக்கியமானது. சுடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குடும்பத்தில் ஒருவர் மறைந்தார்

தாங்க முடியாத அந்தத் துயரச் செய்தி கிடைத்தது. அன்று பதினேழாந் திகதி வேலைத்தல பதட்ட நிலையால் என்னால் புறப்படமுடியவில்லை. சோகம் நெஞ்சைக் கவ்வ ஈழநாடு வாரமலரில் வெளிவந்த அந்தக் கட்டுரையை எடுத்துப் பார்க்கிறேன். எதிர்காலச் செல்வங்களை எழுத்தாளர்கள் மறக்கலாமா? என்று கேட்கிறார் திராட்சையூரான் என்ற தலைப்பிலான இளைய தலைமுறை எழுத்தாளரின் அறிமுக கட்டுரை அது. அதே திராட்சையூரான் மறைந்துவிட்டார் என்ற செய்தியை என்னால் நம்பக்கூட முடியவில்லை பிரசுரமாகியிருந்த பால்மணம் கமழும் இளமை முகத்தையும் கட்டுரையையும் திரும்பத்திரும்ப எடுத்துப் பார்க்கிறேன்.

இ. பெர்னாட் திராட்சையூரான், இளவாலை இளவல் என்ற புனைபெயர்களில் பல கட்டுரைகள், கவிதைகள், கதைகள், சிந்தனைத்துணுக்குகள் எழுதிவந்தவர் 37 வயதான இளைஞர். பாதுகாவலன் பத்திரிகையின் துணை ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். சிறுவர்களுக்கென பல்வேறு ஆக்கங்களைப் படைத்தளித்ததோடு எதிர்காலச் செல்வங்களான சிறுவர்களை எமது எழுத்தாளர்கள் புறக்கணிப்பதைக் கண்டு மனம் வருந்தியவர்.

சிறந்த ஒரு எதிர்காலத்தை இலக்கில் உலகில் பெற்றுவிட அவர் முனைந்து செயலாற்றிக் கொண்டிருந்த வேளை குடும்ப வாழ்வில் நிறைவை நோக்கி அவரது திருமணத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை பெனட் மறைந்தது, தாங்கமுடியாத துர்ச்சம்பவம்!



நோய்வாய்ப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் மீண்டும் நம்மத்தியில் வருவார், எதிர்காலத்தில் தனது படைப்புகளால் தமிழிலக்கியத்தை அலங்கரிப்பார் என்று நம்பியிருந்தோம். எமது நம்பிக்கையில் இடிவிழுந்தது. நாளைய நம்பிக்கையான இளந்தளிர் கருகியது! துயரம் தருகிறது.

தனது எழுத்தால் மட்டுமன்றி சமூகசேவை, மதப்பணி என்றெல்லாம் செயல் திறனுடன் இயங்கிவந்த அவரது கல்லறைப் பயணத்தை நினைக்கும்போது அவரே கடைகியாக இயற்றிய பாதுகாவலனில் பிரசுரமாகிய ''கல்லறை'' என்ற கவிதைதான் ஞாபகம் வருகிறது. தனது முடிவைக் கவிஞன் உள்ளம் முன்னரே அறிந்து விட்டதோ? அத்தக் கவிதையில் ஒருபகுதி;

''புல்லும் பூடும் அழகு செய்யும், கல்லும் பேசும் வாயிருந்தால்; அல்லும் பகலும் தெரியாதிங்கே, தொல்லை எதுவும் இல்லை அங்கே''

தொல்லை எதுவும் இல்லை என்று அவர் நம்பிய கல்லறைக்கு அவர் சென்றுவிட்டார். நாம் எங்கள் இலக்கிய குடும்பத்தவனை இழந்து துயரத்தில் நிற்கிறோம். இவரது பெற்றோர் சகோதரர் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

—ஈழநாடு 30 யூலை 1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன இலக்கியத்தில் தரமான முயற்சி

புலவர் ம. பார்வதி நாதசிவம் நாடறிந்த நல்ல கவிஞர். பழந்தமிழ் இலக்கியப் புலமையும் படைப்பாற்றலும் மிக்கவர். பழந்தமிழ் இலக்கியங்களிலே தலை புதைத்தவர்கள் பெரும்பாலும் நவீன இலக்கியங்களை நயக்கத் தயங்குவதும் காணக் கண் மறுப்பதும் நடைமுறை ஆயின், புலவர் அவர்கள் நவீன இலக்கியத்தின் தரமான முயற்சிகளை வரவேற்பதோடு மரபின் தளத்தில் நின்றே எளிமையில் புதுமையும் மிக்க கவிதைகளைப் படைத்துவருவது பல்லாற்றானும் பாராட்டப்பட வேண்டிய விடயம், தமிழ் நாட்டில் புலமைக் கல்வி கற்ற பார்வதி நாதசிவம் செய்யுளில் பயின்ற தமிழ் தன் கவிதைகளில் தரப்பார்ப்பதாக நேரில் என்னுடன் வருந்தி பழகு தமிழிலேயே முழுவதும் எழுத முயலுவதாகக் கூறிய போது 'மற்றவனுக்கு விளங்காததற்கு நானென்ன செய்ய' என்ற சிலரின் வித்துவச் செருக்கு நினைவுக்கு வர, புலவரின் பரந்த மன ஆவல் என் இதயத்தைத் தொட்டது.

புலவரின் 'காதலும் கருணையும்' என்ற தொகுப்பு வெளிவந்து எட்டு ஆண்டுகளின் பின் வெளிவந்துள்ள 'இருவேறு உலகம்' என்ற இந்நூலில் இருபது தனிக் கவிதைகளும் ஒரு குறுங்காவியமும் இடம் பெற்றுள்ளன. கவிதைத் துறையில் புலவரின் ஆழ்ந்த அகன்ற, சிருஷ்டிப்புகளைப் பல்வேறு பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் கவியரங்குகளிலும் அனுபவித்தவன் என்ற வகையில், இந்த இரு தொகுதிகள் மட்டுமல்ல, பல்வேறு தொகுதிகளாகப் புலவரின் கவிதைகள் தொடர்ந்து வெளிவருவது தமிழுக்கு நல்லது என்று கருதுகிறேன்.

புலவர் பார்வதி நாதசிவம் வித்துவப் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதையும் கவிதையும் உரையும் அவரது பரம்பரைச் சொத்து என்பதையும் விட பரந்து விரிந்த கவித்துவ உள்ளம் அவருடையது என்பதில் தான் இளைஞரான எமக்கு மிக்க உவப்பு.

இதுவெல்லாம் கவிதைக்குப் பொருளா என்று அலட்சியப் படுத்திவிடாது அதையெல்லாம் கவியாக்கும் வல்லமை புலவரின் தனித்துவம். மின்சார வெட்டா விலையுயர்வா? பாண் தட்டுப்பாடா? தவருமல் நகையும் சுவையும் பொங்க புலவரின் கவிதையை எதிர்பார்க்கலாம். நடைமுறை உலகோடு தன்னை, தன் கவிதைகளை நன்ருகவே பிணைத்துக் கொண்டவர் அவர்.

அன்னைக்கு விண்ணப்பம் என்ற முதலாவது கவிதையின் தான் உய்வதற்குத் தேவியிடம் எண்ணம் வேண்டும். புலவர் அதற்காகப் பொன்னைப் பொருளைக், கோரவில்லை. நீதிசேர் மனத்தையும் அல்லன விரும்பும்போது தோல்வியையுமே கேட்கிருர். அடுத்து வரும் இனிய தமிழ் வாழ்த்துக்கு அப்பால் புத்தாண்டை வரவேற்கும் பாடல் ''செங்கதிர் வந்தது வானத்திலே, இருள் சென்று மறைந்தது'' என்று பாடுகிருர். நாவலர் பெருமானையும் பண்டிதமணியையும் வாழ்த்தும் இரு பாடல்கள் பண்பும் பயனும் மிக்கன.

நடுங்கும் குளிர், வீதியோரத்தில் ஓர் ஏழைத்தாயும் சேயும் போர்வையோ சட்டையோ அற்ற நிலையில் தாய்ப்பாலிலா முலையினைச் சுவைத்தவாறு நடுங்கிக் கிடந்தது சேய், பக்கத்தில் ஒரு நாய், அதற்காவது உடல் முழுவதும் மயிரெனும் போர்வை. இவர்களுக்கு குளிர் கவிதை !புலவரின் மிகுந்த மனிதாபிமானத்தையும் புலப்படுத்துகிறது.

பொற்ருெடி மீது மோதிக் கற்றூணிடம் மன்னிப்புக் கேட்ட குடிகாரன் பற்றிய கவிதையும், தள்ளுவதற்கு மாணவர் இருப்பதால் பெற்ருேல் பற்றி நினைத்தும் பாராத அதிபரின் மோட்டார் வண்டி பற்றிய கவிதையும், மாவைத் தேடிச் சலிப்புறும் கவிதையும் பாணுக்குப் பறந்த பாவையின் கவிதையும், மின்சார வெட்டும் சம்சார சோகமும் நினைக்கும் தோறும் சிரிப்பைத் தருவன. அவை அநாகரிகத்தில் விளையும் கோமாளித்தனமான சிரிப்பு அல்ல வலிந்து அத்தகைய காட்சிகளைத் திணிப்பது புலவரின் முறையுமல்ல இயல்பாகவே 'நகை'யைத், தரும் காட்சிகளை கவிதையில் படம் பிடிக்கிருர். இது புலவரில் காணப்படும் சிறப்பம்சம். நகைச்சுவை உணர்வு மிகவும் கொண்ட புலவர் 'சும்மா' உரையாடும் போதே 'பொடி' வைத்துப் பல நகைச்சுவைகளை உதிர்ப்பவர், கவிதை என்று வந்துவிட்டால் சும்மாவா விடுவார்.

வாராரோ அன்பர், நாணமே தடை ஆகிய கவிதைகளில் காதல் உணர்வுகளைக் கச்சிதமாகச் சித்திரித்த புலவர் 'அஞ்சுகம் துணிந்துவிட்டாள் கவிதையில் காதலித்து விட்டுப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்துக்காக மனம் மாறும் காதலனை 'நரியென நிற்பவனே, ஆண்கள் நாணிடப் பிறந்தனை செல்க' என்று எடுத்தெறியும் அஞ்சுகத்தைப் படைத்தார். ''பணம் எனும் பாவை'' ''குறும் பாய் நகைத்தாள்'' சுமாரான கவிதைகள்.

''இல்லக விளக்கு'' கவிதையில் பாவையரை ஏற்கும் புலவர் ''எழுத்துக்கு மறுநாள்'' கவிதையில் திருமண எழுத்துக்கு மறுநாள் ஆணும் பெண்ணும் சந்திக்கும் இன்ப அவஸ்தையைச் சுவைபட வெளிப்படுத்துகிறார். அக்கவிதையில் இறுதியில் ''பாரெல்லாம் எழுத்தின் பின்னர் பெறும் பயன் அவரும் பெற்றார்'' என்று முடிக்கிறார். இங்கு எழுத்து இரு பொருள் தருகிறது. ஒன்று திருமண எழுத்து, மற்றது எழுத்து தனது எழுத்தின் பின்னர் உலகம் பெறும் பயனைக் கற்பனை செய்கிறார் புலவர். எழுத்தின்மீது புலவரின் நேசிப்பு அளவு கடந்திருப்பதை இங்கு காண்கிறோம்.

நாடு விட்டுச் சென்றவர் திரும்பி வந்தபோது, ஊரிலே பலர் சுடலைவழி போய் விட்டதைப் பாடும் கவிதை ''எங்கே அவர்?'' தொகுப்பிலே முக்கியமான பகுதி நூலின் தலைப்பிலே அமைந்துள்ள குறுங்காவியம்.

'இருவேறு உலகம்' என்ற இக் குறுங்காவியம் புலவரின் கற்பனைத் திறனுக்கும் கவிதை வளத்துக்கும் சான்றாக அமைந்துள்ளது. காவியப் பண்பின் சிறப்புக் குன்றாத எளிமையும் தரமும் வாய்ந்த ஒரு கதையை வடித்துள்ளார் புலவர். இடவர்ணனையாகட்டும்; பாத்திரப் படைப்பிலாகட்டும் காவியத்தின் ஒவ்வோர் அம்சத்திலும் புலவர் மிகுந்த கவனமெடுத்துள்ளமை தெரிகிறது. இதனைப் படிக்கும்போது புலவரிடமிருந்து பெருங்காவியம் ஒன்றைத் தமிழுலகு பெறவேண்டும் என்ற அவா மேலோங்குகிறது. புலவரின் இது போன்ற குறுங்காவியங்கள் ஒரு தொகுதியாகவும், தனிக் கவிதைகள் ஒரு தொகுதியாகவும் வெளிவந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

புலவரின் படைப்புகள் அத்தனையும் நூலாகட்டும் அவரது பேனா அச்சுருவம் பெறுவது பற்றிய கவலையில்லாமல் இயங்கட்டும். அதன் விளைவாகத் தமிழ் பொலியட்டும். 'இருவேறு உலகம்' வெளிவர உதவிய வள்ளல் போல் பலர் உதவ முன்வர வேண்டும்.

—தினகரன்



# இலக்கிய மேடை

ஈழத்து இலக்கியத் துறையைப் பல நோய்கள் பற்றிப் பீடித்துள்ளன; தமிழகத்தின் இலக்கியவாதிகள் எங்கே போகிறார்கள் என்று உரத்துக் கேள்வியெழுப்பிவிட்டுப் பதிலையும் தாமே சொல்லி முகம் சுழித்து அத்துடன் அமர்ந்து விடுவார்களா? மீண்டும் மீண்டும் வடக்கு நோக்கியே தம் பார்வையை வைத்து அந்த அசிங்கம் பற்றியே அலசுவதில் காலம் போக்குவார்கள். நமது இலக்கியத்தை நசிவுபடுத்த இந்தியக் குப்பைகள் வந்து இறங்குகின்றன என்று குரல் எழுப்புபவர்கள் அதற்காக ஒரு வியாபாரிபோல் பணக்கணக்கு காட்டுகிறார்களே தவிர, அவை ஈழத்து எழுத்துக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களை ஆராய்ந்தார்களா? இப்படிப் பல ஏக்கங்கள் எழுந்ததால், நமது இலக்கியத்துறை இலக்கியப் படைப்புக்கள் சம்பந்தமான பிரச்சினைகளை அலசுவதற்காகவே இக் கட்டுரைத் தொடர் ஆரம்பமாகிறது.

இது யாரையும் புண்படுத்துவதற்காக எழுதப்படவில்லை. இத்தொடரில் சம்பந்தப்பட்டவர்கள் தரும் விளக்கங்களும், பதில்களும் பிரசுரிக்கப்படும்.

சமகால ஈழத்துச் சிறுகதைகளின் 'வடிவம்' பற்றி முதலில் நோக்குவோம்.

சிறுகதை என்றால் ஒரு திறந்த யன்னல் என்பார்கள். ஒரு மின்னல், பொறி என்றெல்லாம் கூறுவார்கள். எழுத்தாளனின் மனத்திலே பதிந்துவிடுகின்ற ஒரு காட்சி - அதன் விவரணம் தான் சிறுகதை. அது பற்றி பல பல கருத்துக்கள் கூறப்படுவது உண்டு.

பறவையைக் கண்டான், விமானம் படைத்தான் என்பதுபோல் ஒரு காட்சி அவன் மனதில் பதியாது 'கதை' பிறக்க முடியாது, மனதில் பதிந்துவிட்ட அந்தக் காட்சியை விளக்கப் பாத்திரங்களை நடமாடவிட அவற்றின் பழைய 'கதைகளை' வரிசைப்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாதது. ஒரு காட்சியை விவரித்து பின் நினைவோட்டத்தில் பழைய 'வரலாற்றை' சுவைபடக் கூறுவது' இப்போது சாதாரணமாகக் கையாளப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒரு கதை சுருக்கமாக விவரித்துக் கூறும்போது சில விமர்சகர்கள் சீறிப் பாய்கிறார்கள்.

தமிழ்க் கதைஞர் வட்டத்தின் காவலர் மதிப்பிற்குரிய வ. இராசையா அவர்கள் எனது 'சிறுகதை' ஒன்றினை 'குறுநாவல்' பாணியுடையது என்று விமர்சித்தார். நானும் ஏற்றுக் கொண்டேன்.

சிறுகதையிலே 'குறுநாவல்' பாணி?

உதாரணத்துக்கு ஒன்று.

'ஒரு சமுத்திரத்தின் கூனல் நிமிர்கின்றது' என்ற எனது கதையில் சிறு நிலச் சுவாந்தர்கள் மீனவர்களைச் சுரண்டி வாழ்வதையும், மீனவர்களில் பழைய தலைமுறையினர் அடிமைத் தனத்தை ஏற்றுக் கொள்வதையும் இளைய தலைமுறையினர் போராடி சமூகத்தின் கூனலை நிமிர்த்தும்போது பழைய அடிமைத் தலைமுறையும் சுதந்திர உணர்வு பெறுவதையும் படம் பிடித்துக் காட்டியிருந்தேன்.

இக்கதைக் கரு நாவலாகவே எழுதப்பட வேண்டிய ஒன்று. இவ்வாறு இன்று ஈழத்தில் வெளிவரும் பல சிறுகதைகளும் ஒரு நாவலுக்கு வேண்டிய கதைக் கனத்தைக் கொண்டுள்ளன. வ. இராசையா அவர்களின் கருத்துப்படி 'குறுநாவல்' சாயலை உடையன அதுவும் சிறுகதை என்ற குறிப்புடன் வருவன உண்மையில் குறுநாவல் என்றால்.........

காரணம் என்ன?

ஈழத்து எழுத்தாளர்கள் தமது படைப்புக்களை வாசகர்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. அதுவும் நாவல் என்றால் கேட்கவேண்டியதில்லை. இப்படியான நிலையில் ஒரு நாவலுக்குரிய அம்சங்களை கொண்ட கதையையே சிறுகதையின் அளவில் (பக்க எண்ணிக்கை) எழுத வேண்டிய நிர்ப்பந்தம் எழுத்தாளர்களுக்கு உண்டு. நாவலாக எழுதியிருந்தால் எழுத்தாளனின் வீடுகளில்தான் அவை தூங்கும். காலப்போக்கு, பிரசுரகளம் இவற்றால் ஒரு நாவலின் பண்புகளுடன் சிறுகதையின் அளவில் ஆக்கங்களைப் படைப்பது தவிர்க்க முடியாததாகின்றது.



இக்கருத்தை மல்லிகை (1974-ம்) ஆண்டு மலரில் திரு. முருகையன் எழுதியிருக்கிறார். இராசையா ஆவர்கள் 'குறை' காண்பது போல் குறுநாவலின் சாயலில் சிறுகதை எழுதுவது தவிர்க்க முடியாத காலத்தின் தேவை. அந்நிலைக்கு நமது எழுத்தாளர்கள் தள்ளப்படுகின்றார்கள் என்கிறார் முருகையன். திரு. இராசையா அவர்கள் ஏற்றுக் கொள்வார்களோ என்னவோ?

ஈழத்து இலக்கியத் துறையின் வளமான ஊற்றுக்காக சிரித்திரன் சுந்தர் ஒரு தடவை ''நாலைந்து கருத்துக்களை சிறு கதை ஒன்றில் திணிப்பது 'பொருளாதார' நோக்கில் எழுத்தாளனுக்கு 'நட்டம்' என்றார். நமது எழுத்தாளர்களுக்கு இலாபம்' என்ற பேச்சுக்கே இடமில்லை. மக்களுக்கு கருத்துக்களைக் கூற வேண்டும் என்ற வேகத்தில்தான் நம்மவர்கள் எழுதுகிறார்கள். எந்த நட்டத்தையும் ஏற்பார்கள் என்றுதான் நினைக்கிறேன்.

இவ்வாறு சமுதாய நலன் ஒன்றையே நோக்காக கொண்டு ஈழத்தில் எழுத்தாளர்கள் எழுதி வருகிறார்கள். தமிழகத்துச் சஞ்சிகைகளிலே வெளிவரும் கதைகளை எடுத்துக் கொண்டால் (இவர்கள் குப்பை என்று ஒதுக்குபவற்றிலும்) ஒரு மனைவியுடன் தவறான நடத்தை ஏற்பட வேண்டிய சந்தர்ப்பம், 'பிரா' கழற்றுவது, முறை தவறிய உறவு இப்படி ஏதாவது ஒன்றை வைத்து 'குறுநாவல் பாணி' என்று இவர்கள் சீறிப் பாய்கிறார்களே, அவர்கள் சிறுகதைக்குரிய பண்புகள் என்று எதிர்பார்க்கும் அத்தனையும் நிறைவாக வருகிறது. அந்தப் படைப்புக்கள் வளர்ந்து வரும் நமது புதிய எழுத்தாளர்களின் எழுத்தில் குறிப்பிடத்தக்க மதிப்புகளை ஏற்படுத்திவிடும்.

இலக்கிய நோக்கு எதுவும் அற்ற குப்பை - சிறுகதையின் வடிவம் நிறையப் பெற்றுள்ளது. தரமான சிந்தனையை (அது குறுநாவல் சாயல் உடையதென்றாலும்) பிரதிபலிக்கும் கதை இரண்டையும் திரு. இராசையா போன்றவர்களின் தராசில் இட்டால் எது தாழுமோ?

உதாரணத்துக்கு ஒன்று; தமிழகத்தில் மிக வேகமாக முன்னணிக்கு வந்துள்ள வண்ணதாசன் அவர்களின் புளிப்புக் கனிகள் என்ற கதை - கலைக்கப்படாத ஒப்பனைகள் தொகுப்பில் உள்ளது; (குமுதத்திலும் பின்னர் வெளிவந்தது) ஒரு பெண்ணை விரும்பி, அவள் கிட்டாத வேளை சேற்றை வாரி வீசுவதை வெளிப்படுத்துகிறது. தரமான இக்கதை இவர்களின் கருத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி சிறுகதை வடிவம் நிறையப் பெற்றது, ஆனுல் குமுதத்தில் 12 பக்கங்களில் வெளிவந்தது. ஈழத்துப் பிரசுர களத்தை ஈழத்து எழுத்தாளர்களின் நிர்ப்பந்தத்தை எம்மவர்கள் உணர வேண்டும்.

இலாபநட்டம் பார்க்காமல் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டுமென்ற அவா...... நாவல்களுக்கான மிகக்குறைந்த பிரசுர வசதி............ சமூக மாற்றங்களைப் பிரதிபலிக்க வேண்டும் என்ற சிந்தனை............ பிரச்சினைகளுக்கு முடிந்தளவு தீர்வு காண வேண்டுமென்ற புதிய போக்கு. இவை எல்லாம் ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதைகள் குறுநாவல் பாணியில் அமைவதற்கான காரணிகள். இது ஒரு நிர்ப்பந்தம். காலத்தின் தேவை. இது தமிழகத்து இலக்கியங்களின் தாக்கத்தாலும் மாற்ற முடியாதது.

மதிப்புக்குரிய இராசையா போன்றவர்கள் இந்த நிலைப் பாட்டில் நின்று சிந்திப்பார்களா? திரு. முருகையன் 74ல் கூறியது இன்று பெருமளவு வெளிப்படுகிறது. அவை தமிழ்க் கதைஞர் வட்ட காவலரின் எண்ணத்தில் சிறுகதைகளே இல்லை. பரவாயில்லை!

இனி............ எழுத்தாளன் சமுதாயப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது சரியானதா......? என்ற கேள்விக்கு விடை காண்போம்.

கலாவல்லி — ஆகஸ்ட் 1978



# இலக்கியச் சந்திப்பு!

## சில்லையூர் செல்வராஜன் — காவலூர் ஜெகநாதன்

ஏமது நாட்டில் இரு சிறந்த இலக்கியவாதிகள் சந் திக்கிருர்கள். சில்லையூர் செல்வராசனை தெரியாத தமிழர்கள் இருக்கமாட்டார்கள். தான்தோன்றிக் கவிராயராகி கவிதைத்துறையிலே பல சாதனைகளை நிகழ்த்தியவர். என்ருலும், கலை இலக்கியத்தின் பல்வேறு துறைகளும் கைவரப்பெற்றவர். இந்தப் பல்கலைவேந்தர் பிறவிக் கலைஞர், இலக்கியப்பணி புரிபவர். காவலூர் எஸ். ஜெகநாதன் 76 ஆம் ஆண்டு இலக்கியத்துறையுள் நுழைந்தவர். ஏராளமான சிறுகதைகளை எழுதிக்குவித்துப் பிரபலமானவர். இலக்கியப் போட்டிகளிலெல்லாம் பரிசு களைத் தட்டிக்கொண்டதால் 'பரிசு எழுத்தாளர்' என்று பத்திரிகைகளாலும் இலக்கிய ரசிகர்களாலும் குறிப் பிடப்படுபவர். இருவரும் சந்தித்து பலமணிநேரம் உரை யாடினுர்கள் சுடருக்காக! அவர்களின் உரையாடல் இங்கு இடம் பெறுகிறது.

**ஜெகநாதன்:** சிறுகதைத்துறையிலேயே நான் தீவிர ஆர்வம் கொண்டிருப்பதால் அதிலிருந்தே தொடங்குவோம். நீங்கள் கதை எழுத ஆரம்பித்த கதையையும் அக்காலத்தில் எழுந்த கதைகள் பற்றியும் கூறுங்கள். ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு உங்கள் பங்களிப்பு என்ன?

**செல்வராசன்:** நிறைய வாசிக்கும் பழக்கம் என்னேடு கூடப் பிறந்தது. ஈழத்தில் முதல் சிறுகதைப் போட்டியை 50 ஆம் ஆண்டளவில் சுதந்திரன் நடத்தியபோது, அதற்கு கதை எழுதத் துணிந்தேன். சதங்கை நாதத்தை அனுப்பினேன். முதற் பரிசு கிடைத்தது. அந்தக் காலத்துக்கு அது ஒன்றே போதும். எழுத்தாளர்களும் குறைவு. பத்திரிகைகளும் குறைவு. அக்காலத்தில் ஒரு எழுத்தாளன் பிரபலமடைய அது போதும். இக்காலத்தில் எழுத்தாளர் எண்ணிக்கை மிக அதிகம். அந்த நிலையில் பிரபலமாவதென்ருல் மிகவும் கடினம். உங்களைப் போல் தொடர்ந்து ஏராளமான பரிசுகள் பெற்ருல்தான் உண்டு. குளத்தில் தேடுவதற்கும் கடலில் தேடுவதற்கும் உள்ள வித்தியாசம். அதைத் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கதைகள் எழுதினேன் தான். ஆனால் இவை வரலாற்றில் இடம்பெறக் கூடியவை அல்ல. ஈழத்து சிறுகதைகதுறைக்கு எனது பங்களிப்பு என்றால், வீரகேசரி வாரமலர் ஆசிரியராக இருந்தபோது நல்லபல சிறு கதைகளைத் தேர்ந்து எழுத்தாளர்களுக்கு உற்சாக மூட்டி எழுதச் செய்ததுதான்.

ஜெக: அன்றும் இன்றும் ஈழ, தமிழக சிறுகதைகளில் ஏற்பட்டுள்ள ஏற்ற இறக்கங்களைப்பற்றி பார்ப்போம். பொதுவாக ஈழத்தில் தரம் அன்றையதைவிட கூடியுள்ளதாகவும், தமிழகத்தில் தரம் அன்றையதைவிட குறைந்துள்ளதாகவும் நான் நினைக்கிறேன்.

செல்வ: நீர் அப்படித்தான் சொல்வீர். சொல்ல வேண்டும். ஆனால் உண்மை வேறாக இருப்பது போல் தோன்றுகிறது. தமிழகதிதின் அக்கால கதைகளில் ஆழமான கலை நேர்த்தி இருந்தது. இப்போது அது குறைந்து பொழுது போக்கு மலிந்துவிட்டது. அதே வேளை சில சமூகப்பார்வைகள் கூடியுள்ளதையும் மறுக்க முடியாது. ஈழததில் அக்காலத்தில் டானியல், அ. செ. மு. பொன்னுத்துரை போன்றவர்கள் சம்பவங்களை கிரகித்து படைப்பாக்கி கொடுத்தார்கள். புல்லைத்தின்றமாடு பாலைத்தான் கொடுக்கவேண்டும். புல்லைக்கொடுக்கக்கூடாது.

ஜெக: அப்படியென்றால் இப்பேபதைய பசுக்கள் புல்லைத்தான் தருகின்றன என்கிறீர்களா?

செல்வ: தவறு! எல்லாம் அல்ல. உதாரணமாக உமது கதைகளைப் பார்த்தால் மிகத்தரமான கதைகளும் பலவுண்டு மறுக்கவில்லை. ஆனால் பலவற்றில் அவசரக் கோலமும் தெரிகிறது. பத்திரிகையை இலக்காகக் கொண்டு கதை படைக்கக் கூடாது. ஏனென்றால் பத்திரிகையில் வரும் எல்லாம் இலக்கிய அந்தஸ்து பெறுவதில்லை. காலத்தில் நிலைப்பதில்லை. எத்தனை கதைகள் காதற் கண்ணீர் வடித்து இசையும் கதையும் 'ரைப்'பில் பத்திரிகைகளில் வருகின்றன? அவையெல்லாம் இலக்கியமாக மதிக்கப்படாது. ஆற்றல் மிக்க நீர் தொகுப்புகளை வெளியிடுய்போது, பத்திரிகைச் சிந்தனையில்லாது எழுதி கனமாக கதைகளை வெளியிடவேண்டும். இது எனது ஆலோசனை.



ஜெக: நன்றி செல்வராசன். உங்களுடைய 'ஈழத்து நாவல் வளர்ச்சி! நூல் படித்திருக்கிறேன். அந்த முயற்சியில் உங்களை உந்திய அகபுறக் காரணிகள் யாது? இப்போது சிலர் எழுதும் வரலாற்று நூல்களில் இருட்டடிப்புகளைக் கண்டீர்களா?

செல்வ: இலக்கியத்தில் நாம் என்ன செய்திருக்கிறோம் என்ற தேடல் முயற்சியின் விளைவு அது. அந்த முயற்சிக்கு நம்மை உந்தியது 'ஈழத்து இலக்கியம் 10 ஆண்டுகள் பின் தங்கியிருக்கிறது' என்ற பகீரதன் இங்கு வந்து பசியது. மூன்று ஆண்டுகள் அதற்காகப்பாடுபட்டேன். முதல் முயற்சியாதலால் கடினமாக இருந்தது. வரலாறு எழுதும் போது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்கக்கூடாது. பழைய வரலாறு என்றாலும் காரியமில்லை. சமகால வரலாற்றிலேயே இப்படி ஒரு மோசடி!

*சுடர் ஜனவரி 1980*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org